கடமை வீரர்
கருணாநிதி.

கலைமன்றம்

$0.50

கடமை வீரர்

கருணாநிதி

மோகன் புத்தக நிலையம்
174, ரொங்கூன் ரோடு
சிங்கப்பூர்-8.

கலைச்செல்வன்

கலைமன்றம்
சென்னை-1

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

வெளியீடு : 109
முதற் பதிப்பு : நவம்பர் 1953
உரிமை உடையது

விலை ரூ. 0—8—0

விற்பனை நிலையம் :
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனா பஜார்
சென்னை-1

விருப்பத்தின் விளைவு

★

எழுத்துலகிலே, பேச்சுலகிலே, திரையுலகிலே பெரும் புகழுடன் விளங்கும் வீரர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள். அவருடைய உழைப்பும், தொண்டும் திராவிட நாட்டை நல்ல முறையில் சீர்திருத்தி வருகிறது என்பது நாடறிந்த உண்மை.

தன் கடமையினின்றும் தவறாத அந்தச் செயல் வீரரைக் **கடமை வீரர் கருணாநிதி** என்ற பெயரால் அழைத்து அவர் வாழ்க்கையில் நடை பெற்ற சில சம்பவங்களை உங்களுக்கு நினைவு படுத்த விரும்பினோம். இந்த விருப்பத்தின் விளைவே இந்த நூல். இதனை இரு கரம் கொண்டு ஏற்பீர் என்று நிச்சயமாக நாங்கள் நம்புகிறோம்.

வணக்கம்

கலைமன்றத்தினர்

ஊடுருவி எழுதியவை

ஆராய்ச்சி

கோயில்கள் (இங்கர்சால்)
சீர்திருத்தம் ,,
மூடநம்பிக்கை ,,
மதங்கள் ,,
உண்மை ,,
மக்கள் உரிமை ,,
அறியாமை ,,
கடவுள் ,,
அரசாங்கம் (லெனின்)
மாஜி கடவுள்கள்
தொழிலாளர் (மாஜினி)

வரலாறு

கலிங்கப்போர்
வீரமங்கை ஜோன்
உலகைத் திருத்திய உத்தமர்கள் (1-ம் பாகம்)
ஒளி விளக்குகள் (2-ம் பாகம்)
சீனத்துச் சிங்கம்
ரஸ்புடீன்
வால்டையர்
நெப்போலியன்

கதைகள்

ரோமியோ-ஜூலியத் (ஷேக்ஸ்பியர்)
லைலா - மஜ்னு
நா நா (எமிலிஜோலா)

கடமை வீரர் கருணாநிதி

★

“ அதோ ஓடுகிறான் ”

“ ஓடிப் பிடியுங்கள் ”

“ விரைந்தோடி வளைத்துக் கொள்ளுங்கள் ”

“ காலை ஒடியுங்கள் ”

“ மண்டையைப் பிளந்து இரத்தமோடச் செய்யுங்கள் ”

“ வளைந்து வளைந்து ஓடுகின்றான் விடாதே! பிடி!”

“ ஆள் ஆழாக்காக இருந்தாலும் என்ன ஆட்டம் ஆடுகின்றான் ”

“ ஆமாம்! ஒழித்து கட்டி விடுவோம்! பிரிந்து பிரிந்து ஓடிப் பிடியுங்கள்!”

“ இன்று அவன் தப்ப முடியாது! ஒழிந்தான்!”

என்ற பயங்கரமான காட்டுக் கூச்சலை எழுப்பிக் கொண்டு ஓடியது ஒரு கூட்டம்.

“ யாரை நோக்கி ?”

சாதாரண ஒல்லியான ஒரு இளைஞனைப் பிடிக்க!

அந்த இளைஞன் ஓடுகிறான், ஓடுகிறான் ஓடிக் கொண்டேயிருக்கிறான், மாலை நேரம் இருண்ட வீதியில் தலைதெறிக்க ஓடுகிறான் எந்த வீடாகிலும் தனக்கு உதவுமா? புகலிடம் தருமா? என்று அவன் கண்களால் அவ்வீதியின் இருபுறத்திலிருக்கும் வீடுகளை நோக்கிய வண்ணமே ஓடுகிறான். ஆனால் அவசர அவசரமாக ஒவ்வொரு வீட்டுக் கதவுகளும் இழுத்துத் தாழ்ப்பாள் போடப்படுகிறது.

என்ன செய்வான் பாவம்? நாதி அற்ற அவன்—அந்த நேரத்தில் ஆதரவற்ற அவன், அந்தத் தெருக் கோடிக்கே வந்துவிட்டான். கோடி வீட்டின் கதவு திறந்திருந்தது கண்டான். நிராயுதபாணியாக எதிரிகளின் மத்தியில் சிக்கிய வீரனின் கையில் ஒரு வீர வாள் கிடைத்தால் எவ்விதம் மகிழ்வானோ—நாவறண்டு நடந்து செல்பவனை எதிர்நோக்கி மோர்காரி மோர் கூடையுடன் வந்தால் அவன் மனம் எவ்விதம் மகிழுமோ அவ்விதமான மகிழ்வுடன் அந்தவீட்டிற்குள்ளே நுழைந்தான்; நொடிப் பொழுதில் கதவை சாத்தினான்; தாளிடத் தாழ்ப்பாளைத் தேடினான். ஆனால் அது கிடைக்கவில்லை. இருந்தால் தானே கிடைக்கும்? தன் முழு பலத்தையும் திரட்டி கதவுக்கு முட்டுக்கொடுத்த வண்ணம் திரும்பினான்! அங்கு :

நனைந்த கருத்த சில மேசைகள் இருந்தன. அந்த மேஜைகளின் மீது வரிசையாக சில ஜாடிகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஜாடியிலிருந்து வழிந்து வந்த நீரைத் துடைத்துக்கொண் டிருந்தான் ஒருவன். அவனைச் சுற்றிச் சிலர் நின்றுகொண் டிருந்தனர். ஒவ்

வொருவரிடமும் ஒரு கோப்பை யிருந்தது. அந்தக் கோப்பையில் ஒருவன் ஜாடியிலிருந்த நீர் போன்ற ஒன்றை எடுத்து ஊற்றி கொடுத்துக் கொண்டிருந்தான். அங்கிருந்தவர்கள் அதனை ஆடியாடிக் குடித்தவண்ண மிருந்தனர். சிலர்கையில்கம்புகளை தாங்கியிருந்தனர். சிலர் கத்தியைத் தீட்டிக்கொண் டிருந்தனர். ஆம்! அவர்கள் முகத்தில் புலிப்பார்வை தான் இருந்தது. சீறும் சிறுத் தையின் உள்ளம்தான் அவர்களுக்கு இருந்தது. நகைப்பு பயங்கரச் சத்தத்தை எழுப்பியது. பேச்சுக்கள் நம் காது களை கைகொண்டு புதைத்துக் கொள்ளச் செய்யும். அவர்கள் வாயிலிருந்து அவர்கள் வைத்திருந்தக் கோப் பைகளிலிருந்து — ஜாடிகளிலிருந்து ஓர் துர்நாற்றம் வீசிற்று. அந்த நாற்றத்தின் வாயிலாகவும், அந்த காட்சியின் மூலமாகவும் அந்த இளைஞன் இஃதோர் மனிதனை மடையனுக்கும் மது உண்ணும் இடம் என் பதை உணர்ந்து கொண்டான். இவ்வளவும் ஒருசில விநாடிகளில் உணர்ந்த அந்த இளைஞன் வெளியேற முடியவில்லை. அவனைத் துரத்திக்கொண்டு வந்த அந்தக் கூட்டம் நெருங்கி விட்டது. பாவம்! இந்த இக்கட் டான நிலையை எதற்கு ஒப்பிடுவது.

நரிக் கூட்டத்திற்கு பயந்து ஓடிவந்த புள்ளிமான் புலிக்கூட்டம் வாழும் குகையில் . தானுக வந்து சிக்கிக் கொண்டது போல—அந்த இளைஞன் ஆதரவு தரும் என்று கருதி அடைக்கலம் புகுந்த இடம் ஆபத்தை வளர்க்க அனுகூலம் செய்யும் இடமாக இருந்தது.

என்ன செய்ய முடியும்? அவன் புகுந்த அந்த வீடு அடியாட்களுக்கு மது தந்து அனுப்பும் வீடு என்று எப்படித் தெரிந்திருக்க முடியும் அந்த இளைஞனுக்கு?

கலகக்காரர் கூட்டம் உள்ளே நுழைந்து விட்டது. அந்த இளைஞன் தன் உடம்பைக் கதவோடு கதவாய் ஒட்டிக்கொண்டு இருளிலே மறைந்திருந்தான்.

உள்ளே நுழைந்த முரடர்களா விடுவார்கள்? தேடினர்! "எங்கே அந்தப் பயல்?" என்றான் ஒருவன். "அதோ பார்" என்று நல்ல விழிகளைச் சுட்டிக்காட்ட அமைந்த சுட்டுவிரலினால் குற்றம் புரியாத அந்த இளைஞனைச் சுட்டிக் காட்டினான் ஒரு கொடியோன்.

கேட்க வேண்டுமா? கொடியவர்கள் அவர்கள்—அதுவும் பலர். அவனோ இளைஞன்—கொடுமைக் கனவிலும் காணாதவன்—நினையாதவன். ஆம்! கொடுமை அந்த வீட்டினுள் கோரத் தாண்டவம் புரிந்தது.

கதவின் பக்கலில் நின்றிருந்த இளைஞனை பிடித்திழுத்தான் ஒருவன்—"குத்துடா" என்றான் வேறொருவன் "இப்படியா" என்று குத்திக் காட்டினான். "அப்படியல்ல இப்படி" என்று பலமாகக் குத்திக் காட்டினான் வேறொருவன். "குத்த தெரியவில்லை உங்களுக்கு இதோ பார்" என்று அடி வயிற்றில்குத்தினான்ஒருவன். "விலா எலும்பை முறி"என்றான் ஒருவன்."அப்படியே" என்று செய்து காட்டினான் வேறொருவன்.பாவம் அந்த இளைஞன் நிலை தளர்ந்து வீதியிலே வந்து வீழ்ந்தான்.

அத்துடன் நிறுத்திக் கொண்டார்களா அந்தக் கொலைக்கஞ்சாத பாதகர்கள். அந்த வீட்டிலிருந்து தெருக்கோடி வரையில், அந்த இதய மற்றப் பாவிகள் கஜத்திற் கொருவராக அணிவகுத்து நின்றனர். கீழே வீழ்ந்த இளைஞனை ஒருவன் தூக்கி நிறுத்தி ஒரு அடி

ஒரு குத்து தந்து அடுத்தவனிடம் தள்ளினான். அவன் அப்படியே செய்து அடுத்தவனிடம் தள்ளினான். இவ்வி தம் அடிபட்டு—குத்து வாங்கிய வண்ணம் அந்த தெருக் கோடியில் வந்து வீழ்ந்தான் அந்த வீர இளைஞன்.

அந்தப் பாவிகள் பந்து என்று எண்ணி விளையாடி னார். அவன் ஓர் பண்புமிக்க வீரன்! இணையற்ற எதிர் காலத் திலகம் என்னும் பெயருடன் புகழப்படுவான் என்பதை அப்போது அந்தப் புல்லர்கள் எப்படி உணர முடியும்!

அத்துடன் நின்றுவிடாமல் மறுபடியும் அவனைப் பந்தாடி வந்த இடத்திற்கே திருப்ப நினைத்தார்கள். இந்தப் பந்து விளையாட்டு அந்தப் பாலகனின் பாதி உயி ரைக் குடித்து விட்டது. உணர்வை முழுவதும் இழந்து விட்டான்.

இவ்விதம் நடைபெற்ற கோரத் திருவிளையாடல் களை—இதயமற்ற அரக்கச் செயலை—நீதி நேர்மையற்ற போக்கை கண்டிக்கும் உள்ள உரம் படைத்தவர்கள் அந்த தெருவில் எவரும் இல்லை என்று சொல்லி விட லாம். ஆனால் அந்த சொல் நம் வாயிலிருந்து வெளி வராமல் ஒருவர் தடுத்து விட்டார்.

யார்? அவர்?

கொள்ளைக் கூட்டத்தினருக்கு குடிவகைகளைக் கொடுத்து அவர்களின் கள்ள நினைப்பை நீடிக்கச் செய் பவர்கள் இருந்த அந்த வீட்டின் — அந்த இளைஞன் ஆதரவு பெற சென்றானே அந்த வீட்டின் எதிர் வரிசை

யில் இருந்த ஒரு வீட்டின் கதவு திறக்கப்பட்டது. அங் கிருந்த அந்த வீட்டினர் வெளியே வந்தனர். அந்தக் கலகக் கூட்டத்தினரைக் கண்டு அஞ்சாமல் வந்து கீழே வீழ்ந்திருந்த அந்த இளைஞனைத் தூக்கிக் கொண்டு தன் வீடு நோக்கிச் சென்றார். ஆம்! அந்த நல்லவர் இல்லை யென்றால் அந்த இளைஞன் உயிர் அன்றே பிரிந்து போயிருக்கும். ஆதரவற்ற சமயத்தில் ஆதரவு தந்த அந்த பெரிய மனிதருக்கு அந்த இளைஞர் சார்பில் நாமும் நமது நன்றியைத் தெரிவிப்போமாக!

ஆம்! அந்த வீட்டுக்காரர் புதுவையிலே நல்ல புக ழும், மதிப்பும் மிக்க உயர் குடியைச் சேர்ந்த செல்வாக்கு மிக்கவர், ஆகவே அந்தக் கலகக்காரர்கள் அவரிடம் வாலாட்ட முடியாமல் வாய்மூடிச் சென்றனர்.

ஏன் அவர் காப்பாற்றினர்?

யார் அந்த இளைஞன்? இந்த கேள்விகளுக்குப் பதில் அறிய விரும்புகின்றீர் அல்லவா? - சற்றுப் பொறுங்கள்! அந்த இளைஞன் ஒரு நடிகன். ஆம்! 'திராவிடர் நடிகர் மன்றம்' என்ற பெயருடன் புதுவை யில் அன்று நாடகம் நடித்துக்கொண் டிருந்தது அந்த மன்றம். அப்போது அங்கு "சாந்தா" என்ற நாடகம் நடந்துகொண் டிருந்தது. அந்த நாடக ஆசிரி யர்தான் அடிபட்ட இளைஞர்! அது மட்டுமல்ல—அந்த நாடகத்தில் "சிவகுரு" என்ற பாக மேற்று நடிக்கும் நடிகனுங்கூட. அந்தக் கதாசிரியன் — நல்ல நடிகன் தான் நடுத்தெருவில் நாயை அடித்து விரட்டுவது போல அடித்து விரட்டப் பட்டான். அந்த நடிகனின் நடிப்

பில் மனதைப் பறி கொடுத்திருந்தார், அவனைக் காப்பாற்றிய அந்த வீட்டுக்காரரர் அதன் காரணமாகத்தான் உதவினார். ஆமாம்! அந்த இளைஞனை மரணம் என்னும் ஒரு பெரிய அரக்க னிடமிருந்து காப்பாற்றினார்.

இன்னும் புரியவில்லையல்லவா? யார் அந்த நடிகன்—நாடகாசிரியர் என்று! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்!

○ ○ ○

திராவிடர் இயக்கம் இன்று பெற்றுள்ள செல்வாக்கில்லாத நாள்—காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் மதிப்பு தந்த மக்கள் வாழ்ந்த காலம். அந்த நேரத்தில் திராவிடத்தின் ஒரு பகுதியான புதுவையில், கூட்டம்—மாநாடு நடத்துவது என்பது முடியாத காரியங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட நேரம். "திராவிடம் — திராவிடர்" — இந்தச் சொற்களை கேட்டாலே வெறுப்பு கொண்ட மக்கள் வசித்த சமயம். அந்த சமயத்தில்தான் புதுவையில்—புதுக் கருத்துக்களை தாங்கிய "சாந்தா" என்னும் நாடகத்தை திராவிட நடிகர் மன்றத்தார் நடித்து வந்தனர். வசூல் குறைவுதான்! இருந்தும் அதைப்பற்றி கவலைக் கொள்ளாமல் நாடகம் நடத்தியே வந்தனர். முதல் நாள் கூட்டம் இல்லை, இருந்தாலும், வந்த மக்கள் வெளியே போகும் போது குதூகலத்துடன் சென்றனர். அதன் விளைவு அடுத்த நாள் மூன்று மடங்கு அதிகரித்தது. நாள் ஆக ஆக நாடகம் பார்த்துத் திரும்பியவர்கள் "அந்த சிவகுரு எப்படி நடிக்கின்றான். அவன் பேச்சும் அடுக்குச்சொல்லும், துடுக்கு மொழியும் பிரமாதம் பிரமாதம்" என்று பேசினார்கள். நாடகம் நற்

பெயர் பெற்றது. சிவகுரு மக்கள் மனதில் இடம் பெற்ருன். அந்த நடிகன் சிவகுரு தன் நடிப்பின் மூலம் பகுத்தறிவு விதைகளை சிறுகச் சிறுகத் தூவிக் கொண்டேயிருந்தான்.

அந்த நேரத்தில் புதுவையில் செல்வாக்கு பெற்றிருந்தவர்கள் தேசியவாதிகளும் கெம்பா கட்சியினரும் தான், மற்ற கட்சிகள் மதிப்பின்றி இருந்தன. அப்போதுதான் திராவிடர் இயக்கம் தன் ஆரம்ப வேலைகளை செய்து சிறுகச் சிறுக நாட்டு மக்களின் நச்சு நினைப்பைப் போக்கி நல்ல நினைப்பை உண்டாக்கிக் கொண்டு வந்தது. அந்த அரும்பெரும் தொண்டின் காரணமாகப் புதுவையில் "திராவிடர் மாநாடு" கூட ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படியே கூடினர். அந்த மாநாட்டில் திராவிடத் தந்தை பெரியாரும் திராவிடத் தளபதி அறிஞர் அண்ணவும் பங்கு கொண்டனர்.

மாநாடு நடக்க ஏற்பாடு செய்யப்பட்ட அந்த நாள் காலையில் நமது அறிஞர் அண்ண அவர்கள் கொடியேற்றி வைத்துப் பேசினர் கிழவனும் வாலிபனுகும் வகையில். அதன் பிறகு எவ்வளவோ எதிர்ப்புகள் குறைந்தன, எத்தனையோ மக்கள் தங்கள் மனதில் திராவிடர் இயக்கத்தைப் பற்றித் தவருக நினைத்திருந்ததை மாற்றிக் கொண்டனர், எதிர்ப்பு குறைவுதான், இருந்தாலும் ஒரு சில காலிகளும், கூலிக்கு மாரடிக்கும் குள்ள மனம் படைத்ததுகளும் கலவரம் செய்யக் காத்துக் கொண்டிருந்தனர்.

முற்பகல் நிகழ்ச்சி முடிந்தது; பிற்பகல் நிகழ்ச்சி ஆரம்பித்தது. பெரியார் எழுந்து பேசினர். ஆம்! அவர்

தொழிலாளர்களைப் பற்றித்தான் பேசிக்கொண் டிருந் தார். அவர் பேச்சு முடியவில்லை—திடீரென்று எதிர்ப் பாளர்கள், கைக்கூலிகள், கலகம் விளைவிக்க ஆரம் பித்து விட்டனர். அடி — வெட்டு — குத்து என்ற கோஷங்கள் எழுப்பிய வண்ணம் தங்களின் மட்டரகக் காரியத்தில் ஈடுபட்டார்கள். உடனே போலீசார் தலை வர்களை நல்ல பாதுகாப்புடன் பாதுகாப்பான இடத் திற்கு அனுப்பி விட்டனர்.

அந்தக் கூட்டத்திற்குப் பலர் வந்திருந்தனர். அதிலே ஒருவர் சாந்தா நாடகத்தின் கதாசிரியரும், சிவகுருவாக நடிப்பவரும் ஆன அந்த இளைஞர்!

ஆம்! அந்த இளைஞர், கூட்டம் கலவரத்தில் முடி வடைந்ததால், தனது நாடக கம்பெனிக்கு போய்விட குறுக்கு வழியில் விரைந்து நடக்கலானார்.

அப்படி அவர் நடந்து வந்துகொண் டிருந்தபோது தான், கலகக்காரக் கூட்டம், "அதோ ஓடுகிறான் சிவகுரு! பிடியுங்கள்" என்று அவரைத் துரத்திச் சென்று கடைசி வீட்டிற்குள் அவர் நுழைந்துகொள்ள, அவரை அடித்துப் பந்தாடி மூர்ச்சையாகும்படி துன் புறுத்தினார்கள் அந்த இளைஞரை!

யார் அந்த இளைஞர்! யார் அந்த நடிகர்! யார் அந்த சிவகுரு! இனியும் பொறுக்கமுடியாது. சொல் சீக்கிரம் என்று கேட்கத் தோன்றும் தோழர்களுக்கு.

தயவுசெய்து கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங் கள்

* * * *

பெற்று பிரியத்தோடு வளர்த்து, அறிவு புகட்டிய தகப்பனர் உடல் நலம் குன்றியிருக்கிருர். இந்தச் செய்தி அறிந்த வெளியூரில் பொதுப்பணியாற்றிவந்த அவருடைய அருமை மகனர் தன் சொந்த ஊருக்கே வந்துவிட்டார். தன் தந்தைக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதிலும், அவர் மிக விரைவில் பூரண சுகமடையும் வழிகளிலும் கவனம் செலுத்தி வந்தார். ஆனல், மாருக தந்தையாரின் உடல் நாளுக்கு நாள் குன்றிவந்தது. ஒருநாள் முற்றிவிட்டது. தந்தையார் உடல் நிலே மிக மிக மோசமாகிவிட்டதால், மருத்துவம் செய்துவந்த டாக்டரை அழைத்துவர டாக்டரின் மருத்துவ விடுதி நோக்கி நடந்தார். ஆனல் அங்கே அவர் இல்லே. “எங்கே சென்ருர்?” என்ற கேள்வியைக் கேட்டதற்கு, “மருத்துவக் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது, அங்கே சென்ருர்” என்ற பதில் கிடைத்தது. உடனே அங்கே சென்ருர். அங்கு அந்த டாக்டர் அந்தக் கூட்டத்திற்கு தலேவராக இருந்தார். ஆகவே பல கூட்டங்களுக்குத் தலேமை தாங்கியும் - பேசியும் பழக்கப்பட்ட அந்த இளேஞர் அவர் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந் தார். ஆனல் அந்தக் கூட்டத்தினர் அந்த இளேஞரைக் கண்டு பிடித்துவிட்டனர். உடனே அவரைப் பேச வேண்டும் என்று அனேவரும் ஒரே குரலில் வழக்கமான ஆரவாரத்துடன் கேட்டுக்கொண்டனர். பாவம்! அந்த இளேஞன் பட்டபாடு மிக மிக சங்கடமானதுதான். மரணப் படுக்கையில் தந்தை இருக்கும் காட்சி ஒரு பக்கமும், ஆயிரக் கணக்கான மக்களின் ஆரவாரக் காட்சி ஒரு பக்கமும் தோன்றி அவரை மிகவும் சிக்கலில் தவிக்கவிட்டது. இறுதியில் அவர் பேச

சம்மதம் தந்தார். ஆம்! தந்தையாரைக் காட்டிலும் மக்கள் குரலுக்கு மதிப்பு கொடுத்த மாவீரர். அதுமட்டு மல்ல மற்றவர்கள் செய்ய முடியாத செயலைச் செய்து காட்டியவர்..

அந்த இளைஞர் பேசவேண்டிய முறை வந்தது. எழுந்தார். "அன்புள்ள தலைவரவர்களே!" என்று ஆரம்பித்து, உணர்ச்சி வயப்பட்டு மக்களின் முன் னேற்றத்திற்கான வழி வகைகளை ஆணித்தரமாக, கடல் மடை திறந்ததுபோல பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவருடைய நண்பர் ஒருவர் வந்து அவருடைய செவியில் இரகசியமாக ஏதோ சொன்னார். அவ்வளவுதான்! அவருடைய முகம் மாறுதல் அடைந் தது! உள்ளம் திடுக்கிட்டது! உணர்வு சுழன்றது! ஆனாலும் உடனே அதனை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டார். பழையபடி மனதை மாற்றிக் கொண்டார். மறுபடியும் பேச்சு மழையினைப் பொழிந் தார்.

இந்த நிலைமையை கவனித்து வந்த நண்பர் பதை பதைத்தார். இப்படியும் இருக்கலாமா? என்று அதிச யித்தார். அவரால் அதனைப் பொறுக்க முடியவில்லை. உடனே கூட்டத்தின் தலைவரிடம் விஷயத்தை விளக் கினார். அதனைக் கேட்ட தலைவர் திக்பிரமை கொண் டார். அவர் மனம் வேதனைக் கடலில் ஆழ்ந்தது. முகம் வாடியது. இருந்தும் பேசும் அந்த வீர இளைஞரின் உள்ள உறுதியை மனமார வியந்தார்; பாராட்டினார். மற்றவர்கள் மனதாலும் நினைக்க பயப்படும் துணிகரச் செய்கை என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டார்.

பின்னர் கூட்டத்தைச் சில நிமிடங்களில் முடித்துக் கொண்டார் தலைவர். உடனே டாக்டர் அந்த இளைஞருடன் வீட்டை நோக்கி நடந்தார்.

என்ன ரகசியம் அது என்று உங்களுக்குத் தெரிய வேண்டுமல்லவா? ஆம்! அந்த இளைஞர் பேசிக்கொண்டிருந்தபோது அவர் நண்பர் அவருடைய காதுகளில் உபதேசம் செய்த இரகசியம் "உன் தந்தை இறந்துவிட்டார்" என்பதாகும்.

தந்தை இறந்துவிட்டார் என்ற செய்தி காதுகளுக்கு வந்தபின்னரும் தன் கடமை உணர்ச்சியிலிருந்து வழுவாமல் பேசியிருக்கின்றார் அந்த இளைஞர். அவருடைய நெஞ்சுறுதி—கொள்கை ஆர்வம்—செயற்கரிய செயல் இவைகள் எல்லாருக்கும் வந்துவிட முடியுமா?

இவ்விதம் கடமையாற்றிய அந்தக் கொள்கை வீரர் யார்? என்று கூறிவிட வேண்டுமல்லவா? இதோ கூறிவிடுகிறேன்.

தோழர்களே! முதலிலே குறிப்பிட்ட சிவகுரு, நடிகர், இளைஞர்—இரண்டாவதாகக் குறிப்பிட்ட தந்தை இறந்தது கண்டும் கலங்காது கடமையாற்றிய வீரர் யார்? என்பதுதானே தெரியவேண்டும். மேலும் தொடருங்கள்! அவருடைய வரலாறு ஆரம்பமாகிறது.

* * * * *

உலகிற்கு நாகரிகத்தை முதன் முதலில் எடுத்துக் காட்டிய திராவிடத்தில்—சோழ மண்டலத்தைச் சேர்ந்த திருவாரூர் என்னும் செழிப்பான ஊருக்கு

அடுத்து திருக்குவளையூர் என்ற ஓர் இடம் உண்டு. அங்கு தமிழ் மரபில் தோன்றிய தம்பதிகளான திரு. முத்து வேலர் — திருமதி. அஞ்சுகத்தம்மாள் என்பவர்களுக்கு இரத்தாட்சி ஆண்டு வைகாசி மர்தம் இருபத்து நான்காம் நாள் (6—6—1924) அன்று ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

அந்த ஆண் குழந்தைதான் முதலில் நாம் கூறிய படி இரு நிகழ்ச்சிகளிலும் கதாநாயகனாய் வந்த குழந்தை. ஆம்! அந்தக் குழந்தைக்குத் தெரிந்திருக்காது பிற்காலத்தில் நாம் இவ்விதமான வீர விளையாட்டுகளை நிகழ்த்துவோம் என்று! ஆம்! அஃதறியாது பகுத் தறிவுப் படை திரட்டி அறப்போர் பல வென்று வாகை மாலை சூடுவோம் என்று!

அதுமட்டுமல்ல அந்தக் குழந்தைக்குப் பேர் சூட்டி னார்களே, அவர்கள்கூட அறிந்திருக்கமாட்டார்கள் நாம் வைத்த கருணாநிதி என்னும் பெயருக்கு முன் கலைஞர் என்ற ஓர் சிறப்புப் பெயர் ஒட்டிக்கொள்ளும் என்று!

இப்போது புரிகின்றதா யார் என்று! கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்தான். இன்று ஆயிரமாயிரம் இளைஞர்களின் இதயங்களில் குடியிருக்கும் கலைஞர் கருணாநிதிதான் நாம் முன் கூறியபடி 'சிவகுரு' என்ற பாத்திரமாக நடித்தவர். ஆம்! இன்று அறப்போராட் டத்தில் பங்கு கொண்டு - போராட்டத் தளபதியாக யிருந்து முதல் நாளே சிறைக்கோட்டம் சென்ற இந்த வீரத் தளபதியைத்தான் அன்று புதுவை தெருக்

களிலே விரட்டி விரட்டி அடித்தார்கள். கல்லக்குடி என்னும் கன்னித் தமிழ் பெயரை கட்டிக் காப்பதன் மூலம் தமிழரின் பெருமையை நிலைநாட்ட போராடிய அவர்தான் அன்று தந்தையார் மரணப் படுக்கையில் இருக்கும்போதும் கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு தந்தை இறந்தார் என்ற செய்தி கேட்டும் தன் வருத்தத்தை அடக்கிக்கொண்டு பேச்சு மேடையில் தான் ஆற்றிக்கொண் டிருந்த சொற்பொழிவை முடித்த பின்னரே இல்லம் சென்ற வீர நெஞ்சுரம் படைத்தவர்.

இன்னும் அவர் வாழ்க்கையில் பலப்பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவைகளையும் நாம் அறிந்த வரையில் சற்று பார்ப்போம்.

பிள்ளைப் பருவம்

எல்லோரையும் போலவே பிறந்து, தாய் தந்தையர்களின் அன்பால் வளர்ந்து, குழறும் மொழி பேசும் குழந்தைப் பிராயத்தைத் தாண்டிப் பள்ளிப் பருவம் அடைந்தார். அவரை அன்போடு வளர்த்த தாய் தந்தயைர் தன் மகனைப் படிக்க வைக்க நினைத்தனர். அதன் காரணமாக அவர் திருக்குவளையூரிலேயே ஒரு தெருப் பள்ளிக்கூடத்தில்—திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். படித்தார் சாதாரணமாக.

ஐந்தாம் வகுப்பு வரையில் படித்துவிட்ட பின்னர் அந்தப் பள்ளியில் படிக்க முடியாது. தன் மகன் இன்னும் அதிகமாகக் குறைந்தது உயர்நிலைப் பள்ளி படிப்பையாகிலும் முடித்துவிடவேண்டும் என்று தந்தையார் விருப்பப்பட்டார்.

அந்தக் காலங்களில் கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகளா இருக்கும். திண்ணைப் பள்ளிக்கூடங்கள் தான் கிராமப் பல்கலைக் கழகங்கள். அதுவும் இல்லா திருக்கும் கிராமங்களை நினைத்து பார்க்கும் போது திண்ணைப் பள்ளிகள் இருக்கும் கிராமம் எவ்வளவோ சிறப்புடைய தன்றோ!

தன் மகன் கருணாநிதி உயர்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டு மென்றால், திருவாரூர் சென்று படிக்க வேண்டும் மகனை மட்டும் தனியாக அங்கே அனுப்பி படிக்க வைக்க மனமில்லாத தந்தை முத்துவேலர், குடும்பத்துடன் திருவாரூர் செல்ல முடிவு கட்டினார்.

ஆனால் அவர் எண்ணம் பலிக்கவில்லை. கருணாநிதி படித்து வந்தத் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் ஓர் ஆரியர் (பிராமணர்) அவர் முத்துவேலரின் முடிவைத் தெரிந்து கொண்டு அவரிடம் சென்றார். வந்தவரை வரவேற்று வந்த காரணத்தை கேட்டார் முத்துவேலர்.

ஆனால் ஐயர் "ஒன்றுமில்லை" என்று இழுத்து "உங்கள் மகன் கருணாநிதியின் விஷயமாகத்தான்" என்றார்,

முத்து: "என்ன விஷயம் விளங்கச் சொல்லுங்கள்"

ஐயர்: நீங்கள் திருவாரூர் போவதாகக் கேள்விப் பட்டேன் அது சம்பந்தமாக இரண்டொரு விஷயம் பேசலாம் என்று........!"

முத்து: பேசுங்கள் தாராளமாகப் பேசுங்கள்!

ஐயர்: நானென்ன நல்லதுதானே சொல்லப் போகி றேன், எல்லாம் உன் மகன் நன்மைக்கும், உன் னுடைய க்ஷேமத்துக்கும் தான்.

முத்து: எதற்கு இவ்வளவு பீடிகை விஷயத்திற்கு வாருங்களேன்.

ஐயர்: இதோ பாருங்க பிள்ளைவாள்! பேசாமல் பையனை இன்னும் ஒரு வருஷம் என்னிடம் ட்யூஷன் கற்றுக் கொள்ள விடுங்கள் நான் அவனை நன்கு படிக்கும்படி செய்து அடுத்த வருஷம் எட்டாம் வகுப்பில் சேர்த்து கொள்ளும்படி செய்து விடுகின்றேன். உனக்கும் லாபம், மகனும் சீக்கிரம் முன்னுக்கு வருவான், எனக்கும் திருப்தி என்ன? நீர் நல்ல மனுஷனுயிற்றே என்று தான் இவ்வளவு சிரமப்பட்டு சொன்னேன் இல்லேன்னு எனக் கென்ன அக்கரை?

முத்து: ஆம்! நீங்கள் சொல்வதும் சரி!

ஐயர்: சரி இல்லாததை சொல்வேனு நான் நீங்க அடுத்த வருஷம் திருவாரூர் போய் பகவான் கிருபையாலே நல்ல சுகமா இருங்க—பையனும் சரஸ்வதி அருளாலே நல்லா படிச்சி முன்னுக்கு வரட்டும் நான் தடுக்க வில்லை.

முத்து: "சரிதாங்க சாமி! பையனுக்கு படிப்பு சொல்லிக் கொடுத்து உங்கள் இஷ்டப்படியே செய்திடலாம்" என்றூர் முத்துவேலர்.

"சரி" நான் வர்றேன் என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்.

அடுத்த நாளிலிருந்து ட்யூஷன் ஆரம்பமாயிற்று நாட்கள் உருண்டு, வாரமாகி, மாதக் கணக்குகளை காட்டி விட்டு ஆண்டு ஒன்றாகி விட்டது. இந்த ஓராண்டு காலம் வரையில் கருணாநிதி ட்யூஷனுக்கு ஒரு கையில் புத்தகமும் ஒரு கையில் ஆசிரியருக்கு வேண்டிய காய்கறிகளையும் தாங்கிச் செல்வார். ஆசிரிய ருக்கு கருணாநிதிக்குப் படிப்பு சொல்லித் தர வேண்டும் என்ற ஆசை நாளுக்கு நாள் தேய் பிறையாகி—கருணாநிதி வீட்டாரிடமிருந்து வரும் காய் கரிகள், மற்ற தானியங்கள்—அவர்கள் தரும் பணம் இவைகள் வளர் பிறையாயிற்று.

இவ்விதம் உருண்டோடிய ஓராண்டில் கருணா நிதிக்குப் பாடங்களை சொல்லித் தராமலே காலத்தைக் கழித்து விட்டார் அந்த ஆரிய ஆசிரியார்.

இந்த உண்மையை எப்படி உணர முடியும் முத்து வேலர்! ஐயரின் சிரித்த முகமும் காக்காய் பிடித்துப் பேசும் பேச்சுக்களும் அவரை முற்றிலும் நம்பச் செய்தன தன் மகன் ஒரே ஆண்டில் எட்டாம் வகுப்புக் குரிய பாடங்களைப் படித்து விட்டான், அந்த அரிய வித்தையைக் கற்பித்தவர் ஆசிரியர் என்று எண்ணி மகிழ்ந்தார்.

அதன் பிறகு தனது திட்டப்படி தன் மகனை அழைத்துக் கொண்டு திருவாரூர் சென்றார். ஓர் உயர் நிலைப் பள்ளிக்குள் நுழைந்தார். தன் மகனை எட்டாம் வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று கூறினார். அவர் விருப்பப்படி கருணாநிதியை பரிசோதனை செய்து

பார்க்க ஓர் ஆசிரியருக்கு உத்திர விட்டார் தலைமை ஆசிரியர்.

பரிசோதனை நடந்தது பாவம்! கருணைநிதி படு தோல்வி. எதுவும் தெரிய வில்லை, எந்தப் பாடத்திலும் அவர் கொஞ்சமும் பயிற்சி அடைந்ததாகத் தெரிய வில்லை ஆகவே தலைமை ஆசிரியர் கருணைநிதியைத் தங்கள் பள்ளியில் சேர்க்க மறுத்து விட்டார். மௌன மாய் இருந்த கருணைநிதிக்கு படிக்க வேண்டும் என்ற ஆசை அதிகம்; ஆனால் அவரைப் பள்ளியில் சேர்க்க மாட்டேன் என்று கூறியதும், அவருக்கு மிகவும் வெட்கமும், ரோஷமும், ஆர்வமும் ஒருங்கே கூடி ஏக காலத்தில் எழுந்த காரணத்தால் "என்னைப் பள்ளி யில் சேர்க்கவில்லையானால் திருவாரூர் தியாகராயர் திருக் கோயில் குளத்தில் வீழ்ந்து செத்து மடிவேன்" என்று கூறினர்.

அதன் பிறகு கருணைநிதியின் ஆர்வத்தைப் பாராட்டியத் தலைமையாசிரியர் அவரை ஐந்தாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளச் சம்மதித்தார். அவரும் அக்கரையுடன் படித்து வந்தார்.

சின்னஞ் சிறு வயதில் சிறுவர்களுக்கு சிற்சில விஷயங்களில் ஆசையும், அக்கரையும் செல்வது இயற்கை யன்றோ! நமது கருணைநிதியின் சிறுபிள்ளை விளையாட்டுகளைச் சற்று கவனிப்போம்.

சிறுவர் கருணைநிதிக்கு மனம் விரும்பிய விளை யாட்டுகளில் முக்கியமானவை நாடகம் பார்ப்பது, பார்த்த நாடகத்தின் நல்ல பேச்சுக்களை மனப்பாடம்

செய்து தானும் பேசுவது, நடிக்க் விரும்புவது, நாடகம் எழுதுவது இவைகளே யாகும்.

அவருடைய வீட்டிற்கு பின்புறத்தில் ஓர் நாடக அரங்கம் அமைத்திருந்தார். அந்த அரங்கில் தன் நண்பர்களுடன் கூடி நடித்துப் பழகுவார். அவருக்கா! நாடக அரங்கம் என்ற சந்தேகம் தோன்றுகின்ற தல்லவா? “ மாட்டுத் தொழுவம் ” இதுதான் நாடக அரங்கு. ஆம்! இன்று திரையுலகில் திக்கெட்டும் விஜயம் செய்து வெற்றிமாலை சூடிவரும் வீரர்—கலைஞர் கருணாநிதிதான் சிறுவயதில் மாட்டுத் தொழுவத்திலே தன் ஆரம்பக் கலையைத் துவக்கினர். அது இன்று கலை உலகின் கதிரவனாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது.

சிறுவர் . கருணாநிதி அவர்களுக்கு அந்த ஆரம்பக் காலத்தில் பிடித்தமான பாத்திரங்கள் இரண்டு. ஒன்று கண்ணன், அடுத்தது அர்ஜுனன். இந்த இரண்டு உருவங்களை அவர் விரும்பினர். அவர் நடிக்கும் போதும் அர்ஜுனன், அல்லது கண்ணன் வேடமே தாங்கி நடிக்க ஆசைப்படுவார். அந்த அளவுக்கு அவைகளின் மீது அவர் விருப்பங் கொண்டார், நாடகம் எங்கு நடந்தாலும் சென்று காண்பதில் அவர் அதிக அக்கரைக் கொண்டிருந்தார்.

ஒரு சில சமயங்கள் கால் பந்து விளையாடுவார். மற்ற காலங்களில் அவரை விளையாடும் இடங்களில் காண்பது அரிது.

இவ்வாறு தன் சிறுமை பிராயத்தை கழித்துக் கொண்டு வந்தார். 1938-ஆம் ஆண்டில் ஒருநாள்,

யாரோ பேசுகிறூர் என்று கூறக்கேட்டு ஒரு கூட்டத் திற்குப் போனூர் கருணாநிதி. அந்தக் கூட்டத்தில் ஒரு வர் எழுந்து பேசினூர். ஆம்! அவருடைய வீராவேச மான—உணர்ச்சிகரமான — உண்மைகள் நிரம்பிய— வேடிக்கை விநோதங்களையும் அறிவோடு குழைத்துப் பேசும் ஆற்றல் கொண்ட சொற்பொழிவினைக் கேட் டார் கருணாநிதி. அதுவும் இரண்டு மணி நேரம் வரை யில்! பெரிய மழை, இடித்து மின்னி ஓய்ந்ததுபோ லிருந்தது அவர் பேச்சு முடிந்த பின்னர். இவ்விதம் வீரவுரை யாற்றியவர் பெயரென்ன? என்று கேட்டார் கருணாநிதி. அங்கிருந்தவர் "அழகிரி" என்றூர் ஒருவர். வேறெருருவர் தம்பி அவருடைய முழுப் பெயர் "அழகிரி சாமி" என்றூர். அந்த அஞ்சா நெஞ்சனை அருகிலே சென்று காண விரும்பிப் போனூர். அப்போது அழகிரி இரும்பி எச்சில் உமிழ்ந்தார். ஆம் அது இரத்தமாக வந் தது. இந்தக் காட்சியைக் கண்டார் கருணாநிதி. இரத்தம் இரத்தமாகக் கக்கிக் கடமையாற்றும் இவர் கர்ம வீரர் என்று தெரிந்துகொண்டார். அன்றுநடைபெற்ற தேர் தல்கூட்டம், ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் கலந்து கொண்ட திரு. இராமானுஜ முதலியாருக்கு ஆதரவாகக் கூட்டப்பட்டது அவரை ஆத ரித்தும் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளையும் எடுத்து விளக்கினூர் தோழர் அழகிரி அவர்கள். இந்தக் கூட் டத்தை கேட்டு விட்டுப் போக வந்த கருணாநிதிக்கு, வீர வுரை நிகழ்த்திய வீரன் இரத்தம் கக்கிய காட்சி மறைய வில்லை. "அழகிரி ஏன் இவ்விதம் பணியாற்ற வேண் டும், கட்சிக்காக இப்படியா இரத்தம் கக்குவது. அந்தக் கட்சி எவ்வளவு உண்மையான கட்சியாக இருந்தால் உயிரைவிட மேலானதாகக் கருதி பணியாற்றுவார்.

ஆம்! அந்த ஜஸ்டிஸ் கட்சி எவ்வளவு உண்மையான கட்சி ! அவரும் எவ்வளவு பெரிய கடமை வீரர் என்று அவருடைய கவனம், எண்ணம், சிந்தனை இவைகள் அர சியல் பக்கம் திரும்ப ஆரம்பித்தது.

இந்த விதமான மனப் போராட்டத்தில் ஈடுபட் டிருந்தார் கருணாநிதி. அதற்குள் ஜஸ்டிஸ் கட்சியின் தேர்வாளரான இராமானுஜ முதலியார் வெற்றி பெற் றார் என்ற செய்தி வந்தது. இதன் பிறகு ஏற்கனவே கருணாநிதியின் மனதில் நிகழ்ந்துகொண் டிருந்த போராட்டம் அதிகமாயிற்று. ஜஸ்டிஸ் கட்சி உண்மை யான கட்சியாக இருந்ததால்தான் அது வெற்றி பெற் றது. அந்த கட்சி உண்மையாக இருப்பதால் தான் அழகிரி போன்றோர் தன்னலம் மறந்து பணியாற்று கின்றார் என்று தீர்மானித்தார். இன்றுள்ள கட்சிகளில் நியாயமான கட்சி ஜஸ்டிஸ் ஒன்றே என்று முடிவு கட்டினர். அதன் பிறகு தானும் அந்த நல்ல இயக்கத் தில் அங்கமேற்று நற்பணிப் புரிய முன் வந்தார்.

ஆம்! நமது கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு உண்மையான அரசியல் குரு யார் என்றால் மறைந்த மாவீரன், அஞ்சா நெஞ்சன் அழகிரி தான். அவர் பேச்சு வன்மை திராவிடத்திற்கு ஒரு கலைஞர் கருணாநிதி தந்தது என்று கூறுவது மிகமிகப்பொருந்தும்.

இவ்விதமாக கருணாநிதி என்னும் சிறுவனின் இதய மென்னும் விளைவு நிலத்தில் அழகிரி தூவிய கொள்கை விதைகளை, கருணாநிதிக்கு துணைப்பாட புத் தகமாக வைக்கப்பட் டிருந்த 'பனகல் அரசர் வர லாறு' நீர் ஊற்றி, எரு போட்டு வளர்த்து வந்தது.

அரசியல் வாழ்க்கை

திராவிடர் யாருக்கும் பிடிக்காத இந்தி, திராவிடர் விரும்பாத இந்தி—தமிழ்ப் பயிரை மேய வந்த காலத்தில் அந்த இந்தி மாட்டை விரட்டித் தமிழ்ப் பயிரைக் காக்கும் பணியில் திராவிடம் திரண்டெழுந்தது. அறப் போர் துவங்கியது. இந்தி வேண்டாம்—இன்ன காரணங்களால் அதனை வெறுக்கிறோம் என்ற பல விஷயங்களை தமிழ் நாட்டு அறிஞர்கள் மூலை முடுக்கெல்லாம், எழுத்தாலும்,.பேச்சாலும், அறிக்கைகளின் வாயிலாகவும் பரப்பி வந்தனர். அந்த அரிய பணியில் பள்ளியில் படித்து வந்த சிறுவர் மாணவர் கருணாநிதியும் கலந்து கொண்டார். இந்தியை அவர் எதிர்த்தார் இந்தி எதிர்ப்புக் கான வேலைகளில் ஈடுபட்டார். அவர் படித்த அந்த பள்ளியின் இந்தி ஆசிரியர் மற்ற மாணவர்களை இந்தி எதிர்ப்பில் ஈடுபடாதபடி மிகவும் முன் எச்சரிக்கையுடன் தடுத்து வந்தார். அவர் சொல்லை மறுத்து இந்தி எதிர்ப்பில் கலந்த ஒரு சிலரை மிகவும் பயமுறுத்தினார். சிலர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தார். இவ்விதம் ஆசிரியர் பயமுறுத்திய போதும் "என் தாய் மொழிக்கு இழுக்கு வரும்போது நான் சும்மா யிரேன்." என்று கூறிக்கொண்டு ஆசிரியரின் அடக்கு முறையை அலட்சியப் படுத்திவிட்டு இந்தி எதிர்ப்பு அறப்போரில் மிகமிக வேகமாக ஈடுபட்டுப் பணியாற்றினர். அந்த சமயங்களில் அவருக்கு தக்க சில நண்பர்கள் உடனிருந்து உதவினர்.

"இந்தி அவசியமா? இந்நாட்டிற்குத் தேவையா" என்ற அறிக்கைகள் இந்தி எதிர்ப்பு இயக்கம் அச்சிட்டு திருவாரூருக்கு அனுப்பியது. அந்த அறிக்கைகளைத் தைரியமாக முன் வந்து பரப்பும் உள்ள உரம் ஒருவருக்கும் வரவில்லை. பயந்த மனதுடன் நாட்களைக் கழித்து வந்தனர். ஆனால் நமது கருணாநிதி சும்மா இருக்க முடியுமா? துள்ளி எழுந்தார்; அறிக்கைகளை ஏந்திக் கொண்டார், ஏறு நடை நடந்த வண்ணம் அதனைத் தெருக்களில் வழங்கினார் யாரும் செய்ய முன் வராத அந்த தீரச் செயலை அங்கு அன்று செய்து காட்டியவர் நமது கலைஞர் ஒருவரே யாவர்.

அறிக்கைகளை கொடுத்துக் கொண்டே சென்ற போது, கருணாநிதியின் இந்தி ஆசிரியர் தற்செயலாக எதிர்பட்டார். அவரைக் கண்டவுடன் பயந்தாரா? அல்லது அறிக்கைகளை மறைத்துக் கொண்டாரா? இல்லை. புன்முறுவல் பூத்த முகத்துடன் அவரிடமும் ஓர் அறிக்கையை நீட்டினார். மறுக்க மார்க்க மில்லாமையால் அதனை வாங்கிக்கொண்டு கண்களிலே கோபக் கனல் பறக்க நடந்தார். ஆனால் கருணாநிதி அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. உண்மைக்கு ஏன் பயம்? நல்லது செய்ய விரும்பும் ஒருவன் நடுக்கம் ஏன் கொள்ள வேண்டும்? என்று எண்ணித் தன் பணியை தொடர்ந்து நடத்திக் கொண்டே சென்றார்.

அடுத்த நாள் பள்ளியில் தன் வகுப்பில் அமர்ந்திருந்தார் கருணாநிதி. இந்தி வகுப்பு ஆரம்பமாயிற்று. ஆசிரியர் வந்தார்; மாணவர்களைச் சுற்றிப் பார்த்தார். அந்தப் பார்வை கருணாநிதியின்மேல் பட்டபோது

பயங்கர ரூபமடைந்தது. உடனே அழைத்தார் கருணாநிதியை. ஆம்! கருணாநிதியை நன்றாக தன் ஆத்திரம் அடங்க அடிக்கவேண்டும் என்ற எண்ணம். காரணமில்லாமல் அடிக்கக்கூடாதல்லவா? ஆகவே இந்தி பதத்தில் ஒரு தெரியாத சொல்லைக் கேட்டார். இயற்கையிலேயே இந்தியை விரும்பாத அந்த இளைஞருக்கு சாதாரண சொற்களே தெரியாது. அப்படியிருக்க தெரியாத புதிய சொல்லை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? விழித்தார் கருணாநிதி. ஆசிரியருக்கு நல்ல காரணம் கிடைத்துவிட்டது. அறைந்தார் கன்னத்தில், கை வலிக்கும் வரையில். திட்டினார் வாய் வலிக்கும் வரையில். சிறுவர் கருணாநிதி அந்த ஆசிரியர் அடிகளையும், ஏச்சுக்களையும் தாங்க முடியாமல் கஷ்டப்பட்டார், பாவம்! தன் கடமையைச் செய்தது தவறு என்று ஆசிரியர் கூறியது,அடித்தது அவருக்கு ஆத்திரத்தைக் கிளப்பிற்று. அவரால் அடக்க முடியவில்லை. ஆகவே, ஆத்திரமும், அழுகையும் கலந்த குரலில், "நீர் என் தெரு பக்கம் வாரும் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று கூறினார். ஆம்! அந்தச் சொல் தலைமீது அணு குண்டு வீழ்ந்ததுபோ லிருந்தது அவருக்கு. அன்று முதல் அவர் கருணாநிதி இருக்கும் தெரு பக்கம் போவதை மாற்றிக்கொண்டு வேறு வழியாகப் பள்ளிக்குப் போவார் பாவம்!

இவ்விதமான அடக்குமுறைகள் பல இருந்தபோதிலும் இவைகளைக் கண்டு கடுகளவும் அஞ்சாமல், அயராமல் தன் பணியினை விடாமுயற்சியுடன் செய்து வந்தார். மாலையில் "இந்தி ஒழிக" என்ற கூக்குரலுடன் ஊர்வலம் செல்லுவார். இந்தி தேவையில்லை என்று

எங்கும் முழங்குவார். இந்தி ஒழிந்தது. கருணாநிதியும் தனது போராட்டத்தை நிறுத்திக்கொண்டார். அத்தகைய செயல் வீரர் கலைஞர் கருணாநிதி!

நல்ல கருத்துக்களை நாட்டு மக்களுக்கும், சிறப்பாக தன் போன்ற மாணவத் தோழர்களுக்கும் எடுத்துக் கூறவேண்டும். ஆகவே அதற்காக ஒரு சங்கம் நிறுவ வேண்டும் என்று எண்ணினார். ஒரு சங்கம் நிறுவி நடத்த வசதி படைத்தவரல்லவே கருணாநிதி! என் செய்வார். எப்படியும் சங்கம் நிறுவ ஓர் இடம் தேவையல்லவா? அதற்காக மிகவும் பாடுபட்டார். அப்போது அங்கே பாழடைந்து கிடந்த ஓர் அநுமார் கோயில் இருந்தது. அங்கே பஜனைகள் நடைபெறுவது வழக்கம். அந்த இடத்தைப் பார்த்ததும் நாம் ஏன் இந்தக் கோயிலில் ஒரு சங்கம் நிறுவக்கூடாது? இது வீணாக மூடப்பட்டுத்தானே இருக்கிறது? இதனை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருதி, கோயில் நிர்வாகிகளைக் கண்டு பேசினார். அந்தக் கோயிலைத் தன் நண்பர்களுடன் கூடி புதுப்பிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். கோயில் நிர்வாகிகள் மூடியிருக்கும் கோயில் திறந்து வைத்துக்கொண் டிருந்தாலே போதும் என்று கருதி கருணாநிதியின் விருப்பத்திற்கு இணங்கினார். அந்த அநுமார் கோயிலில் ஒரு சங்கத்தை நிறுவினார். அதன் பெயர் சிறுவர் சீர்திருத்த சங்கம். அந்தச் சங்கத்தின் சந்தா ஒரு பைசா, மாதத்திற்கு அல்ல, வாரத்திற்கு. வாரம் ஒரு முறை அந்தச் சங்கத்தில் சொற்பொழிவுகள் நடைபெறும். எல்லா அங்கத்தினர்களும் பேசலாம்- கூட்டத்திற்கு வருபவர்களுக்கெல்லாம் மிட்டாய் வழங்கப்படும். இதுதான் அந்தச் சங்கத்தின் ஆரம்ப கால நிகழ்ச்சி!

இந்தச் சங்கத்தில் மிட்டாய் விரும்பும் சிறுவர்களும், விஷயத்தைக் கேட்க விரும்பும் சிறுவர்களும் சேர்ந்து இருதரத்தாரும் நாளுக்கு நாள் நல்ல அறிவு விருந்தை உண்ணத் தலைப்பட்டனர். அந்தச் சங்கத்திலிருந்து நல்ல நல்ல கருத்துக்களைத் தாங்கிய அறிக்கைகள் அடிக்கடி வெளிவரும். அந்த அறிக்கைகளில் "சேரன்" என்ற பெயர் இருக்கும். அந்தப் பெயரை உடையவர் வேறு யாருமல்ல நமது கருணாநிதியேயாகும். தன் வீட்டாருக்குத் தன் செயலைக் காட்டாமல் மறைக்கவே அவர் புனைபெயரால் எழுதி வெளியிட்டார்.

நாளுக்கு நாள் நல்ல முறையில் பணியாற்றிய அந்தச் சங்கம் வளர்ந்து விரிந்தது. அதன் பிறகு அந்தச் சங்கத்தின் பெயரை மாணவர் ஒற்றுமைக் கழகம் என்ற பெயராக மாற்றினர். ஏன் அவர் அவ்விதம் செய்தார் என்றால் தமிழ் நாட்டிலுள்ள மாணவர் அனைவரையும் ஒரே ஒரு கழகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற பரந்த எண்ணத்தால்தான். அந்தக் கழகம் ஏற்பட்ட பிறகு 'மாணவ நேசன்' என்னும் ஒரு கையெழுத்து பத்திரிகை ஒன்றை கழக ஆதரவில் கருணாநிதி நடத்தினர். அதுவும் சிறந்த முறையில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி வந்தது. ஒவ்வொரு இதழிலும் கருணாநிதி எழுதிய கட்டுரை இடம் பெறும் என்பது சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் யாரும் இருக்கமாட்டார்கள். ஆம்! அந்தச் சிறுவயதிலேயே எழுத்து வன்மை பெற்றிருந்தார் கலைஞர் கருணாநிதி!

கருணாநிதியின் தந்தையார் ஓர் இசை வல்லுநர். அவர் வீட்டில் அடிக்கடி பாடும் பாட்டுகளை கவனமாக

வும், உணர்ச்சி வயப்பட்டும் கேட்டுப் பழகி வந்தார். அந்தப் பழக்கம் அவருக்கு அடுக்குச் சொல்லையும், அழகான நடையையும் கற்றுக்கொடுத்த ஆசிரியராக இருந்தது.

நாள் ஆக ஆக வெளிப் பத்திரிகையில் எழுத வேண்டும் என்ற ஆசை கருணாநிதியின் உள்ளத்தில் எழுந்தது. அவர் எண்ணப்படியே 1942-ஆம் ஆண்டில் அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்கள் திராவிடநாடு என்னும் பத்திரிகையைத் துவக்கினார்கள். அந்தப் பத்திரிகை கருணாநிதியின் கருத்தைக் கவர்ந்தது. ஆகவே திராவிடநாடு பத்திரிகைக்கு ஒரு கட்டுரையை எழுதி அனுப்பினார். அந்தக் கட்டுரை பத்திரிகையில் வெளிவந்தது. அந்தக் கட்டுரையைக் கண்டார் கருணாநிதி. களிப்புக் கடலில் மூழ்கினார். அவர் கட்டுரை முதன் முதலில் அச்சு வடிவத்தில் பார்த்த முதல் காட்சி அதுதான். படித்தார்; ஒரு தடவை அல்ல பல முறை படித்தார், படித்துக்கொண்டே இருந்தார். அவர் ஆசை அடங்கும் வரையில் படித்தார். அந்தக் கட்டுரையின் பெயர் இளமைப் பலி. ஆர்வம் அவரைப் பிடித்து ஆட்டியபடியால் அடுத்து, 'சுயமரியாதைச் சுதந்திரம்' என்னும் வேறோர் கதையை வரைந்து அச்சுக்கு அனுப்பினார். ஆனால் இம்முறை அவர் எழுதி அனுப்பியது பத்திரிகையில் வெளிவரவில்லை. பொறுத்திருந்து பார்த்தார் வரவில்லை. "ஏன் வரவில்லை, நான் எழுதியது நன்றாக இல்லை என்று தள்ளிவிட்டார்களா" என்ற சந்தேகத் தேள்கள் அடிக்கடி அவரைக் கொட்டிக்கொண்டிருந்தன.

முதல் சந்திப்பு

அறிஞர் அண்ணா அவர்களை கருணாநிதி பார்த்த தில்லை, படித்ததுண்டு. ஓர் நாள் திருவாரூரில் அறிஞரேறு அண்ணா அவர்கள் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசச் சென்றிருந்தார். கூட்டத்தில் பேசி முடித்த பின்னர் கூட்டத்தை நடத்தியவர்களை “நான் கருணாநிதியைப் பார்க்க வேண்டும்” என்றார் அவர்களும் அண்ணா அழைப்பை கருணாநிதிக்கு அறிவித்து அவரை அழைத்து வந்தனர். ஆம்! அறிஞர், அன்று இன்றைய கலைஞரைக் கண்டார்; இன்றைய கலைஞரும் அறிஞரைக் கண்டார். அந்தப் பார்வை அறிவுக்கும், கலைக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்புண்டோ அவ்வளவு தொடர்புடைய பார்வையாகும் பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் கருணாநிதியின் முதுகில் அண்ணன் தன் தம்பியை அன்புடன் முதுகில் தடவிக் கொடுப்பது போல தடவிக் கொடுத்த வண்ணம் “தம்பி நீ படித்துக் கொண்டிருக்கிறாய் இந்த காலத்தில் உன் கவனம் கதை எழுதுவதில் சென்றால் பின்னர் கல்வியில் அக்கரை யில்லாமல் போகும். ஆகவே உன் முதல் வேலை படித்துத் தேறுவதாகும். அதன் பிறகு உன் முழு கவனத்தையும் எழுத்தில் செலுத்து எனக்கு உன்னைப் போன்ற படித்த தம்பிமார்கள் பலர் தேவை. தெரிகிறதா? இந்தக் காரணத்தால் தான் உன்னுடைய இரண்டாம் கதையை நான் வெளியிடவில்லை” என்று அன்புடன் அறிவுரை வழங்கினார்.

அந்த அறிவுரையை கவனமாய் கேட்டுக் கொண்ட கருணாநிதி தான் எழுதிய கதை ஏன் வெளியாகவில்லை

என்பதன் காரணத்தை தெரிந்து கொண்டு மகிழ்ந்தார். அண்ணாவின் சொற்படியே நடந்தார்.

இளைஞர் கருணாநிதிக்கு மாணவர்களிடம் பெருஞ் செல்வாக்கு இருந்தது. இந்தச் சமயத்தில் சில பொது வுடமைக்காரர்கள் "மாணவர் சம்மேளனம்" என்ற ஒன்றை நிறுவ முயன்றனர். இந்தச் சம்மேளனத்தில் கருணாநிதியைச் சேர்த்துக் கொண்டால்தான் மாணவர் கள் அதிகமாகச் சேர்ந்து பணியாற்றுவார்கள் என்று கருதி, மாணவ சம்மேளனத்தை நிறுவ முயன்ற சில பெரியவர்கள் கருணாநிதியை அணுகி அவரைத் தங்கள் சம்மேளனத்தில் சேருமாறு கேட்டுக் கொண்டனர்.

அதற்கு கருணாநிதி "உங்கள் மாணவர் சம்மேளனம் ஒரு அரசியல் கொள்கையுடைய கட்சியின் ஓர் உறுப் பாக அமைவதால் நான் அதில் பங்கு கொள்ள முடியாது" என்று திட்டவட்டமாக கூறிவிட்டார் அதன் பிறகு அவர்கள் "இது கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை என்று தாங்கள் கருதுகின்றீர் அது உண்மையல்ல இந்தச் சம்மேளனம் மாணவர் நலனுக்காகவே அமைக்கப்படுவது" என்று கூறி அவரை சேர்த்துக் கொண்டனர். அதில் சிறிது, காலம் பணியாற்றினர் கருணாநிதி அதன்—போக்கு ஒரு அரசியல் கட்சியின் சார்புடைய தாகவே இருந்தமையால் அதிலிருந்து நீங்கி விட்டார்.

மாணவர் சம்மேளனத்திலிருந்து விலகியதும் அவர் சும்மாயிருக்கவில்லை மாணவர்களின் நலன்களுக்காகப் பாடுபடும்ஒருஇயக்கம்தேவைஎன்றுஅவர்உணர்ந்திருந்த படியால் உடனே "தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றம்"

என்னும் ஓர் மாணவ மன்றத்தைத் தோற்றுவித்தார். இந்தச் சங்க வளர்ச்சிக்காகவும், கருணாநிதிக்குப் பக்க பலமாகவும் அவருடைய உயிர் நண்பர்களான தென்னன், யாகூப் முதலியவர்களும் இன்னும் பலரும் இருந்து பணியாற்றி வந்தனர் அம்மன்றம் நன்கு பணியாற்றி வளர்ந்து வந்தது.

அத்துடன் முரசொலி என்ற ஒரு பத்திரிகையும், வெளி வந்தது. ஆம்! அந்த முரசொலி தமிழ் நாட்டு மாணவர்கள்—முதியவர்கள்—இளைஞர்கள், தாய்மார்கள் அனைவரின் உள்ளங்களிலே நல்ல கருத்துக்களை முரசறைந்து வந்தது. இந்தப்பத்திரிகை மாணவர் உலகில் நல்ல பரபரப்பையும், ஊக்கத்தையும் உண்டாக்கியது. இந்தப் பத்திரிகை முதன் முதலில் இலவசமாக வழங்கப் பட்டது. அதன் பிறகு மாணவர்கள், தாங்களது சிறு தொகையை வசூலித்து முரசொலி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

திருவாரூரில் உள்ள தாழ்த்தப்பட்டோர் வாழும் இடங்களுக்குச் சென்று தன் நண்பர்களுடன் சுகாதாரச் சொற்பொழி வாற்றியும், அவர்களுடைய குறைகளை நீக்கியும் வந்தார். திருவாரூரில் பெரியார் பிறந்த தின விழா கொண்டாட வேண்டும் என்று கருதினர். அந்த விழாவை திருவாரூர் திராவிடர் கழகம் நடத்தும் என்று எண்ணி யிருந்தார். ஆனல் எந்தக் காரணத்தாலோ அவர்கள் நடத்தவில்லை. ஆகவே பெரியார் பிறந்த தின விழாவை கருணாநிதியே நடத்தத் தீர்மானித்து விட்டார்.

அதன்படியே அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த தோழர்

நெடுஞ்செழியன் அவர்களை கொண்டு கூட்டம் நடத்த ஏற்பாடு செய்து விட்டார். பெரியார் பிறந்த நாள் அன்று காலையில் முரசொலி ஆண்டு விழாவும், மாலையில் பெரியார் பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்பட்டது. இரு கூட்டங்களிலும் தோழர் நெடுஞ்செழியன் அவர்களே சொற்பொழிவாற்றினர். விழா மிகமிகச் சிறப்புடன் நடை பெற்றது.

பின்னர் தமிழ் நாடு மாணவர் மன்றத்தின் ஆண்டு விழா நடத்த விரும்பினர். அதற்கான செலவு பணத்தை எல்லோரிடமும் வசூலித்து நடத்துவதாகத்தீர்மானிக்கப் பட்டது. அதன் படியே ஆண்டு விழா தோழர்கள் க. அன்பழகன், மதியழகன், புலவர்மாணிக்கம், பொற்செல்வி முதலியவர்களைக் கொண்டு சிறப்பாக நடைபெற்றது. விழாநடந்தது சிறப்பாக என்றால் சொற்பொழிவாளர் களை திரும்பி அனுப்ப பணம் இல்லை நன்கொடை வசூல் வரும் என்று நம்பி கருணாநிதி இந்தக் காரியத்தில் ஈடு பட்டார். பணம் வசூலாக வில்லை என்ன செய்வார் இந்தக் கூட்டத்திற்கு கருணாநிதி அவர்கள் தானே முழுப் பொறுப் பேற்றிருந்தார். ஆகவே அவருக்கே அதிக தொல்லையாக இருந்தது. மிகவும் ஏக்கத்தோடு தன் வீட்டிற்குச் சென்றார் அந்தச் சமயம் அவருடைய அன்னை வெளியில் சென்றிருந்தார்கள். உள்ளே நுழைந்த கருணாநிதியின் கண்களில் ஒரு பெட்டி பட்டது. அதிலே சாவி கொத்தும் தொங்கிக் கொண் டிருந்தது. அதனைத் திறந்தார்; அதனுள் அவருக்குரிய ஒரு தங்கச் சங்கிலி இருந்தது. அதனை எடுத்துக் கொண்டு அடகுக் கடையில் அடகு வைத்துப் பணம் வாங்கி சொற்பொழிவாளர்களை அனுப்பிவிட்டு மற்ற

விழா சம்பந்தமான கடன்களையெல்லாம் கொடுத்து விட்டார்.

கருணாநிதியாரின் சகோதரியார் தன் மகனுக்கு திருவாரூருக்கு சமீபத்திலுள்ள ஒரு கோயிலுக்கு சென்று முடியை எடுப்பதாகப் பிரார்த்தனை செய்துக் கொண்டிருந்தார். அதன்படியே பிரார்த்தனைக் குரிய நாளும் வந்தது. ஆனால் அன்று அந்த அம்மையார் வீட்டை விட்டு வெளியே போகமுடியாத நிலையேற்பட்டு விட்டது பிரார்த்தனையை எந்த விதத்திலும் அன்றைக்கே செலுத்தியாக வேண்டும் என்ன செய்வார்கள் பாவம்! எதற்கும் தம்பி கருணாநிதியை அனுப்பி செய்யச் சொல்லலாம் என்று அவரிடம் தன் நிலைமையையும் பிரார்த்தனை செலுத்தினால்தான் தன் மனம் அமைதியுறும் என்பதையும் மிகவும் உருக்கமாக எடுத்து கூறினார்.

கடவுள் பிரார்த்தனையில் கடுகளவும் நம்பிக்கை யற்றவர்தான் கருணாநிதி. இருந்தும் என்ன செய்வது அவர் இரண்டு பிரச்சனைக்குள் அகப்பட்டுக் கொண்டு விழித்தார். ஒன்று தன் சகோதரியின் மனம் அமைதியுற வேண்டும். அடுத்தது நாம் கோயிலுக்குச்சென்று பிரார்த்தனை செய்யக் கூடாது என்பதாகும். ஒன்றுக் கொன்று மாறுபட்டது தான் இருந்தாலும் கருணாநிதியின் சூட்சம புத்தியால் இரண்டையும் சமாளித்துக் கொண்டார். எப்படி என்றால்:

உடனே அவர் தன் சகோதரியாரிடம் தான் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செலுத்திவிட்டு

வருவதாகக் கூறினர். இந்த பதில் சகோதரியாருக்கு அளித்த மகிழ்ச்சி சொல்ல முடியாது. உடனே தன் மகனை வாரி அவரிடம் தந்து போக்கு வரவு செலவுக்கும் கோயில் செலவுக்கும் பணமும் தந்து அனுப்பினர்.

ஆனல் கருணாநிதி செய்ததென்ன?

தன் வீட்டை விட்டு வெளியே வந்தார் ஒரு முடி வெட்டும் கடைக்குள் நுழைந்தார். தன் மருமகனை குழந்தையின் தலை மொட்டை யடித்தாகிவிட்டது. கடைக்குச் சென்று சந்தனம் வாங்கி அந்த மொட்டைத் தலையில் அப்பினர். பூ, பழம், தேங்காய் இவைகளையும் சாமி பிரசாதத்திற்காக சக்கரைப் பொங்கலும் வாங்கி வைத்துக் கொண்டார். தன் மருமகனுக்கு ஒரு கோயிலை காட்டி "இதுதான் கோயில், இதோ பார் திருக்குளம்" என்று கூறினர். அன்று பகற் பொழுதை ஒரு நண்பர் வீட்டில் கழித்து விட்டு மாலையில் வீடு நோக்கி நடந்தார். ஆம்! தன் தம்பி தனக்காக செய்த உதவியைக் கண்டு மகிழ்ந்தார் சகோதரி மகனுடைய மொட்டை தலையும் பிரசாதமும்தன் பிரார்த்தனை நிறைவேறியதைக் காட்டியது. மிகவும் மகிழ்ந்தார். பாவம் அந்த அம்மையாருக்கு உண்மை எப்படித் தெரியும்?

எது எப்படி போனலும் கருணாநிதி வெற்றி பெற்று விட்டார். தன் கொள்கையையும் காப்பாற்றினர். சகோதரியின் மனமும் மகிழ்ந்தது. அத்துடன் புரட்சிகரமான ஒரு காரியத்தையும் அவர் செய்து காட்டினர். அதாவது பிரார்த்தனைகள் பலன் அளிக்காது என்ற உண்மையை உலகிற்கு ஆதாரத்தோடு எடுத்து விளக்கினர். அந்த குழந்தை இன்னும் நல்ல

முறையில் வளர்ந்து கல்லூரிப் படிப்பும் படித்துக் கொண் டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியைப் படித்த பின்னராகிலும் மூடப் பழக்க வழக்கங்களை கட்டியழும் கபோதிகள் திருந்துவார்களா ?

கருணாநிதியின் படிப்பு பத்தாம் வகுப்பில் தேராத துடன் நின்று விட்டது. ஆம் அவர் கல்லூரி படிப்பில் கவனம் செலுத்துவதிலிருந்து விலகி உலகப் படிப்பு படிக்க விரைந்தார் கலைகளை ஆராயவும், படிக்கவும் ஆர்வம் கொண்டார். அதன்படியே செய்தார் காதல் — எல்லா உயிர்களுக்கும் ஏற்படும் ஓர் இன்பானுபவம். ஆனல் அதில் வெற்றி பெறுபவர் சிலர், தோல்வி கண்டவர் பலர். நம் கருணாநிதி இதில் தோல்வி கண்டவரேயாவர் அவர்காதலித்த மங்கையைகத்தரித்து விட்டது சமூகம், சுற்றம், பழமை இவைகள்.

கருணாநிதியின் காதல் மயக்கம் நீங்க, உடனே திருமண ஏற்பாடுகள் அவசர அவசரமாக செய்யப் பட்டது. அதற்கான நாளும் குறிப்பிட்டாய் விட்டது. 13—9—44 அன்று திருமண நாள். அன்று திரு. மு. கருணாநிதி அவர்களுக்கும், சிதம்பரம் இசைவாணர் திரு. C. S. ஜெயராமன் அவர்கள் தங்கை திருமதி பத்மாவதி அம்மையாருக்கும் சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தது.

பழைய காதலை மறந்து விட்டுப் புதிய மனைவியுடன் இல்லற வாழ்வை விரும்பி ஏற்றுக் கொண்டு நடத்தினர். சிறிது காலம் ஈரோட்டிலிருந்து வெளியான குடியரசு பத்திரிகையில் பணியாற்றி வந்தார். அந்தப் பத்திரிகை யில் விமானி என்ற புனைப்பெயருடன் எழுதி வந்தார்.

சேலம் மாநாட்டிற்குப் பிறகு இயக்கத்திற்கென்று ஒரு கொடி இல்லை. பின் திருச்சி மாநாடு நடைபெற்றது. அதில் கொடியின் அமைப்பைப் பற்றி பேச்சுக்கள் நடந்தன. ஆனால் அந்தப் பேச்சு செயல்முறையில் வரவில்லை. ஆனால் கொடியை எப்படி அமைப்பது? என்பதைப் பற்றி மிகவும் தீவிரமாகச் சிந்தித்தார் கருணாநிதி, அவருடன் சண்முக வேலாயுதம் அவர்களும் பங்கு கொண்டார். இருவரும் சேர்ந்து பலமுறை ஆராய்ச்சிகள் நடத்தினர். நேரம் கழிவதே தெரியாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தன.

ஒருநாள் கொடியினை எப்படி அமைப்பது என்பதைப்பற்றி முடிவு கட்டிவிட வேண்டும் என்றும் தீர்மானித்து விட்டனர். அவர்களுக்கு மணி கழிவதே தெரியவில்லை. 'குடியரசு' காரியாலயம் மூடப்பட்டு விட்டது. இருந்தும் அவர்கள் தன் சிந்தனையை விடவில்லை. வெளியிலே வந்து உட்கார்ந்துகொண்டு தீவிரமாய் ஆராய்ந்தனர். அந்த ஆராய்ச்சியின் பயனாக அவர்கள் மனதில் கருப்பும் சிவப்பும் கலந்த கொடி காட்சியளித்தது. இதுவே நமது இலட்சியக்கொடி என்று அவர்கள் தெரிந்தனர். அவர்கள் மனதால் எண்ணி, சிந்தனைச் சுவரேறி, கற்பனைக் கண்களால் கண்ட அந்தக் கொடியினை எழுதிப்பார்க்க ஆசைப்பட்டனர். தங்கள் கற்பனையால் காட்சியான கொடியினை வரைந்து, அதனைப் பெரியார் இராமசாமி அவர்களிடம் காட்டி அனுமதி பெறவேண்டும் என்று எண்ணினர். உடனே ஒருவர் வெள்ளைத் தாளை எடுத்து அதிலே கருப்பு மையினால் ஒரு கொடியினை எழுதினர். ஆனால் அதன் மத்தியில் சிவப்புமை அமைத்து காட்டினால்

தானே கொடி முழு உருவும் பெற்றதாகும். இருட்டு வேளை—காரியாலயம் மூடப்பட்டாய்விட்டது. எப்படியும் அந்தக் கொடியினை எழுதி முடித்துவிட்ட பின்னர்தான் அவர்கள் நெஞ்சம் அமைதியுறும். ஆகவே மறுபடியும் சிந்தித்தனர். உடனே கருணாநிதி, "சிவப்பு மைதானே வேண்டும்" என்று கூறியவண்ணம் தன்னிடமிருந்த ஒரு குண்டூசியின் துணைகொண்டு தன் கை விரலில் குத்தினார். அதில் ஆம், சிவப்பு மை—திராவிடனின் இரத்தம் வெளிவந்தது. அந்த இரத்தத்தின் உதவியினால் கொடி முழு உருவம் பெற்றது. அவர்கள் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. உடனே ஓடினர் பெரியார் அவர்களிடம். காட்டினர் கழகக் கொடியின் அமைப்பை. அவரும் அது சரியானது என்று இசைவு தந்துவிட்டார். உடனே அந்தக் கொடியினை அச்சிட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. ஆம்! திராவிடக் கழகக் கொடியின் மத்தியில் இருக்கும் சிவப்பு வெறும் நிறமல்ல, கருணாநிதியின் குருதி! கருணாநிதியின் குருதியினால் முதலில் தீட்டப்பட்ட அந்தக் கொடிகள், பின்னர் சிவப்பு நிறத்துடன் எல்லா இடங்களிலும் அசைந்தாடியவண்ணம் இருந்தன.

கருணாநிதி ஓர் கடமை வீரர். ஒரு தடவை திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற கருஞ்சட்டைப்படை மாநாட்டைத் திறந்து வைக்கவேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண் டிருந்தார் கருணாநிதி. ஆனால் அந்தச் சமயத்தில் கருணாநிதி நோய்வாய்ப்பட் டிருந்தார். காய்ச்சல் அதிகமாயிற்று. இருந்தும் அதனைப் பொருட்படுத்தாமல் ஈரோட்டிலிருந்து புறப்பட்டார் துணையோடு. வழியிலேயே காய்ச்சல் அதிகமாகி 'வைசூரி' போட்டு

விட்டது. இதனைக் கண்டும் அவர் கலங்கவில்லை. கருப்புச் சட்டையை அணிந்துகொண்டு மாநாட்டில் திறப்புரையாற்றி தன் கடமையைச் செய்து முடித்தார்.

திருவாரூரில் கருணாநிதி இருக்கிறார். அந்தச் சமயத்தில் புதுக்கோட்டையில் இருந்த இயக்கத் தோழர்கள், கருணாநிதியைக் கலந்தாலோசிக்காமலே கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டனர். இந்தச் செய்தியை அறிந்த கருணாநிதி, "தான் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாதென்றும், தன் மனைவி உடல் நலம் குன்றியிருப்பதாகவும் எழுதிவிட்டார். அந்தக் கடிதத்தைக் கண்ட புதுக்கோட்டை தோழர்கள் புறப்பட்டு வந்துவிட்டனர். அந்த தோழர்களை நேரே அழைத்துக் கொண்டு சென்று மரணப்படுக்கையில் இருந்த தன் மனைவியைக் காட்டித் தன் நிலையை விளக்கினார். வந்த தோழர்கள் நிலைமையைக் கண்டு மிகவும் வருந்தினர். என்றாலும் கருணாநிதி இல்லாமல் போக அவர்களுக்கு மனமில்லை. இதனை அறிந்த கருணாநிதி அவர்களைத் திருப்தி செய்யவும் இயக்கப் பணியினை ஏற்று நடக்கவும் இசைந்து அவர்களுடன் சென்றார். மிக்க மகிழ்ச்சியுடன் அவரை அழைத்துச்சென்று கூட்டத்தைச் சிறப்பாக நடத்தினர். கூட்டம் முடிந்து கருணாநிதி வருவதற்கும், அவருடைய வாழ்க்கைத் துணைவியார் உயிர் பிரிவதற்கும் சரியாக இருந்தது.

கருணாநிதியின் மனைவியார் இறந்து ஒருநாள்தான் கழிந்தது. ஆம்! நேற்றுதான் மனைவி இறந்தார். இன்று ஒரு கூட்டத்தில் பேசவேண்டும் கருணாநிதி. மிகவும் சிக்கலான நிலை. என்ன செய்வது. இந்தக்

கூட்டத்திற்கு கருணாநிதியே வருவதாக இருபத்தொரு நாட்களுக்கு முன்னர் ஒப்புக்கொண்டார். ஆகவே அதனை மீற முடியவில்லை. சென்றார்; பேசினார். ஆம்! தன் கடமையைச் செய்தார். கருணாநிதியின் கடமை உணர்ச்சியைத் தடுத்து நிறுத்த எந்தச் சக்திக்கும் ஆற்றல் இருந்ததில்லை.

இவருக்கு சினிமா டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி அவர்களுடைய நட்பு கிடைத்தது. அதிலிருந்து அவர் சிறுகச் சிறுக சினிமாத்துறையில் புகுந்து பணியாற்றப் பழகினார்.

ஜூபிடரில் ஒரு வேலை கிடைத்தது. அப்போது கோவையில் தங்கியிருந்தார் கருணாநிதி. அந்தப் பகுதியில் தொழிலாளர்கள் அதிகம். அங்கு திராவிட இயக்கத்தவர் தலைகாட்ட முடியாது. இருந்தும் தீரர் கருணாநிதி அங்கே தங்கினார் தம் கொள்கைகளைச் சிறுகச் சிறுக பரப்பியும் வந்திருக்கின்றார். மேலும் அங்கே ஒரு படிப்பகத்தையும் நிறுவினார். அதன் பெயர் புதுமைப் படிப்பகம் என்பதாகும்.

தூத்துக்குடி மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் வரவில்லை என்பதற்காக நடிகவேள் M. R. இராதா அவர்கள் நாடகத்தில் அண்ணாவைத் தாக்கிப் பேசினார். ஆம்! அது கண்டு அனைவரும் வாய்மூடி மௌனிகளாய் இருந்தனர். கலைஞர் கருணாநிதி—கடமை வீரர் கருணாநிதி அவர்களால் சும்மா இருக்க முடியவில்லை. அப்போது அவர் நடத்தி வந்த 'முரசொலி' பத்திரிகையில் எழுதினார். பெரியார் அண்ணா இவர்கள் யார்?

இவர்கள் பிரிய வேண்டுமா இணைந்து இருக்க வேண்டுமா என்ற விஷயங்களைக் குறித்து மிக மிக விளக்கமாக— எழுதியிருக்கிறார். அதில் அழகு நடை, ஆர்வம், அடுக்கு மொழி, அஞ்சா நெஞ்சம், துணிவு, நடுவு நிலைமை, உண்மையை உண்மையாகக் கூறும் திறம் இவ்வளவும் குவிந்து கிடக்கின்றன.

கருணாநிதியின் மனைவி இறந்து விட்ட பிறகு மறுமணம் செய்து வைக்க வீட்டார் முயன்று நாள் பார்த்து விட்டனர். அந்த நாளில் மணக்கோலத்தில் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டிய கருணாநிதி என்ன செய்தார் என்பதை காணுங்கள்.

முதல் தடவை தோற்று ஓடிய இந்தி இரண்டாந் தடவையாக திராவிடத்தில் படையெடுத்து விட்டது. தமிழர் படை திரண்டது. பெரியார், அண்ணா அவர்களை முதல் தளபதியாக தேர்ந்தெடுத்துக் களம் நோக்கிச் செல்லப் பணித்த காலம். இந்தி எதிர்ப்பை அடையாள மறியல் செய்வதன் மூலம் நடத்திக் காட்ட வேண்டும் என்றும் அதற்காக திராவிடத்திலுள்ள எல்லாப் பள்ளிகள் முன் ஒரு நாள் இந்தி எதிர்ப்பு அடையாள மறியல் நடத்த வேண்டும் என்றும், அறிக்கை விட்டார் பெரியார். அதற்கென்று நாளும் குறிப்பிட்டாய்விட்டது. அந்த நாளும் கருணாநிதியின் திருமண நாளும் ஒன்றாக அமைந்து விட்டது. அறிவிப்பு வந்து விட்டதல்லவா? கருணாநிதியா சும்மா இருப்பார் கர்ம வீரரல்லவா?

திருமணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. மணமக

னுக்கு வேண்டிய மங்கல உடைகளை அணிந்து கொள்ள வில்லை கருணநிதி ஆம்! அவர் கருப்புச் சட்டையை அணிந்து கொண்டார். தன் கடமையை யாற்றி பள்ளிமுன் மறியல் செய்ய சென்றார்.

அருமை அன்னையார், மற்ற சுற்றத்தினர், பெண் வீட்டார் அனைவரும் தன்னைப் பற்றி என்ன நினைப்பார் கள் என்பதை பற்றி அவர் கவலைப்பட வில்லை. தாம் திரும்பி வந்து நம்மை நம்பி மணவறைக்கு வந்திருக்கும் மனைவிக்கு மண மாலை சூடுவோமா அல்லது அடிபட்டு வீழ்வோமா சிறைச்சாலைக்கு செல்வோமா என்ற விஷயங்களைப் பற்றி அவர் சிந்திக்க வில்லை அறிக்கை வந்து விட்டது நமது கடமையை செய்வோம் என்ற ஒரே ஓர் கடமை உணர்ச்சி அவரை உந்தச் சென்றார்; மறியல் செய்தார். நல்ல வேளையாக எந்த துன்பத்திற்கும் ஆளாகாமல் திரும்பினர். திருமணம் நடந்தது.

பெரியார் அவர்கள் செய்து கொண்ட பொருந்தா திருமணத்தை-கொள்கைக்குப் புறம்பான செய்கையை-கருணநிதி மிகவும் வன்மையாகக் கண்டித்தார். தலைவர் செய்தது தவறு என்ற போதும் எடுத்துக் கூறினர் அதன் பிறகு ஏற்பட்ட திராவிடர் முன்னேற்றக் கழகத்தில் அறிஞர் அண்ணவுடன் சேர்ந்து நாட்டுக்கு நற் பணியாற்றினர் முன்னிலும் பன் மடங்கு அதிக மாகவும் ஆர்வமாகவும் திராவிட கழகத்திலிருந்து பிரிய வேண்டிய அவசியத்தையும் திராவிடர் முன்னேற்றக் கழகம் வளர்ந்து வாழ்ந்தோங்க வேண்டியதன் காரணங் களையும் பட்டி தொட்டிகளிலெல்லாம் பம்பரமெனச்

சுழன்று சுழன்று சொற்பொழி வாற்றினர் தி. மு. கழகத்திற்கு பேராதாரவைத் தேடித் தந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் கொழுந்து விட்டு வளர வளர கருணாநிதி அவர்களும் வளர்ந்தார் தி. மு. கழகத்தில் சேர்ந்த பின்னர் அவர் செய்த தொண்டு—பணி—உழைப்பு மிக மிக அதிகம் அவைகளில் சில வற்றை இங்கு குறிப்பிடுவோம்.

தி. மு. கழகக் கொள்கைகளைத் தாங்கி வெளிவந்த மாலை மணி என்னும் தினசரிப் பத்திரிகையில் 1951-ஆம் ஆண்டில் ஆசிரியராக இருந்து பணியாற்றினர். அவர் எழுதிய முதல் நாள் தலையங்கம் 'பந்தலாடுகிறது' என்பதாகும் அந்தத் தலையங்கம் சோர்வுற்ற திராவிட மக்களுக்கு எவ்வளவு உற்சாகத்தைத்தந்தது தெரியுமா? காங்கிரசை பந்தலாக்கி அதன் ஆட்டத்தை தன் அழகு எழுத்துக்களால் சுட்டிக் காட்டினர். மேலும் அந்தப் பத்திரிகையில் மாநில மாநாட்டைப் பற்றி "மாளிகை அமைத்திடாவரீர்" என்ற தலையங்கம் எழுதினர். ஆம்! அந்தத் தலையங்கத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஊக்கத்தைத் தந்தது படித்தவர்களுக்கு.

மாநில மாநாட்டை சென்னையில் சிறப்பாக நடத்த வேண்டி யிருந்தபடியால் அந்த மாநாட்டை சிறப்பிப்ப தற்கு எல்லா மாவட்ட கழகங்களும் 2000 ரூபாய் தர வேண்டும் என்று மத்திய கழகம் கேட்டுக் கொண்டது. அந்தச் சமயத்தில், மாநில மாநாடு நடை பெறுவதற்கும், மத்திய கழகத்தை திருப்தி செய்யவும், மாவட்ட கழகங் களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யவும், கருணாநிதி

அவர்கள் சென்னை—காஞ்சி போன்ற இடங்களில் வாழமுடியாதவர்கள் என்னும் நாடகத்தை தானும் இன்றைய திரைஉலக மன்னனுக விளங்கும் சிவாஜி கணேசனும் சேர்ந்து நடித்துப் பணம் திரட்டித் தந்தார்.

இந்த மாநில மாநாடு நடைப் பெறுவதற்கு முன்னர் கோயில்பட்டியில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர். அந்த மாநாட்டில் செய்த தீர்மானங்களில் முக்கியமானவை. வடநாட்டு மந்திரிகளுக்கு கருப்புக் கொடி காட்டுவது. ரயில் நிலையத்திலிருக்கும் இந்திப் பெயர்களை அழிப்பது முதலியனவாகும். மாவட்ட மாநாடுகளில் சிறப்புடைய மாநாடுகள் சில. அவற்றுள் கலைஞர் கருணநிதி தலைமையில் நடைபெற்ற கோயில்பட்டி மாநாடும் ஒன்ருகும்.

1951-ஆம் ஆண்டு மே27, 28-ந் தேதிகளில் கோவையில் முத்தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமை தாங்கினர். நாவலர் சோமசுந்தர பாரதியார் திறந்து வைத்தார். அந்த மாநாட்டில் கலைஞர் கருணநிதி கலந்துக் கொண்டு வீரவுரை நிகழ்த்தியுள்ளார். அது பல இளைஞர்கள் மனதைக் கவர்ந்தது.

மாநில மாநாடு நடைபெற ஒருவாரம் இருக்கும் போது அவருடைய அருமைக் குழந்தை ஒன்று இறந்து விட்டது. இருந்தும் அதற்காகக் கவலைப்படாமல் மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளை நன்கு கவனித்து வந்தார்.

மாநில மாநாட்டிற்குப் பிறகு திராவிட நாட்டு பிரிவினையை ஆதரிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுத்

தேர்தலில் கலந்து கொண்ட தேர்வாளர்களுக்காக பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று சளைக்காமல்—இளைக்காமல் தேர்தல் பிரசாரம் செய்திருக்கின்றார். அவர் செய்த தேர்தல் பிரச்சாரங்களை "களத்தில் கருணாநிதி" என்ற புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

சென்னைக்கு முதன் முதலில் வந்த வடநாட்டு மந்திரி திவாகர் அவர்களுக்கு கருணாநிதி அவர்கள் ராஜாஜி மண்டபத்தருகில் கருப்புக் கொடி காட்டினார். ஆயிரக் கணக்கான மக்கள் மத்தியில் நின்று கொண்டு.

கருணாநிதி எழுதிய "தூக்குமேடை" என்னும் நாடகம் முதன் முதலில் மறைந்த மாவீரன் அழகிரி அவர்கள் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. ஆம்! அந்த நாடகம் எழுதி அவரும் நடித்தார். அந்த நாடகத்தை நடிகவேள் M. R. இராதா அவர்கள் பல நாட்கள் தன் நாடகக் கம்பெனியில் தொடர்ந்து நடத்தி வந்தார். அந்த நாடகம் பொதுமக்களாதரவை பெற்று நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது., அந்த நாடகம் வளர்வதைக் கண்ட அரசியலர் அந்த நாடகத்திற்த் தடை விதித்தனர். ஆனால் அந்த நாடகம் புத்தக உருவில் இன்னும் நடமாடுகிறது. விரும்புவோர் படித்து தெரிந்து கொள்ளுங்கள். தூக்குமேடைதான் முதன் முதலில் தடைசெய்யப் பட்ட நாடகம்.

கோவை மாவட்ட இரண்டாவது மாநாடு மேட்டுப் பாளையத்தில் நடைபெற்றபோது சமூகச் சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை யேற்றுச் சிறப்பாக நடத்தி வைத்தார்.

திராவிடத்தின் நெற்களஞ்சியமான தஞ்சையும் அதனைச் சார்ந்த பகுதிகளும் புயல் தாக்குண்டு சிதைந்தபோது தஞ்சைவாழ் மக்களுக்கு நிதிதிரட்டித் தர ஏற்பாடு நடைபெற்றது. தஞ்சை புயல் நிவாரண நிதிக்கு ஒருகுழு ஏற்படுத்தி அதற்குச் செயலாளராக கருணாநிதியை நியமித்தார்கள். அவரும் அந்த அரும் பணியினை ஏற்றுக் கொண்டார். தன் நண்பர்களுடன் சேர்ந்து 'பரப்பிரம்மம்' என்னும் நாடகம் நடத்தினார் எல்லா இடங்களிலும். அதன் வாயிலாகவும், பொதுமக்கள் ஆதரவாலும் கழக முன்னணி வீரர்களின் ஒத்துழைப்பாலும் நிதியைத் திரட்டிவிட்டார். குழு கேட்டது. 25,000 ரூபாய் ஆனால் அவர் வசூலிததுத் தந்தது 27,000 ரூபாய்க்கு மேல். அவ்வளவு பணத்திற்கும் கைத்தறி ஆடைகளாக வாங்கி அதனை வண்டிகளில் ஏற்றி சென்னைத் தலைமை நிலையத்திலிருந்து ஊர்வலமாகக் கொண்டுவந்து சென்னை பச்சையப்பன் திடலில் பொதுக்கூட்டம் கூட்டிப்பொதுமக்கள் பார்வைக்கு வைத்து அதன்பிறகு தஞ்சை புயல் நிவாரணத்திற்குத் தரப்பட்டது. அந்தக் கூடத்தில் . கலைஞர் கருணாநிதியைப் புகழாதவர்களே இல்லை.

1953, ஜனவரி 4ம் நாள் அன்று கைத்தறி நெசவாளர்களின் குறையை நீக்க தி.மு. கழகம் கைதறி ஆடைகளை தெருத்தெருவாகச் சென்று விற்பது என்று தீர்மானித்தது. அதன்படியே அண்ணா திருச்சி தெருக்களில் துணி விற்றார். கருணாநிதி அவர்கள் சென்னைத் தெருக்களிலே 'கைத்தறி துணிகளை வாங்குவீர்' என்று விலை கூறி விற்றார். கருணாநிதி அவர்கள் விற்றதன் மூலம் கிடைத்த பணம்

தான் அதிகம் என்று கூறப்படுகிறது. அன்றியுங் அந்தச் சமயத்தில் வெளியான 'பணம்' என்னும் திரைப் படத்தில் கருணாநிதியே கைத்தறி துணிகளை வாங்குங்கள் என்று வற்புறுத்திக் கூறுகிறார். ஆகஸ்டில் இந்தி அழிப்பு நடைபெற்ற போது திருச்சியில் கருணாநிதி ரயில் நிலையத்திற்குச் சென்று வேண்டாத இந்தியை அழித்தார். இந்தி தேவையில்லை என்பதையும் ஆகஸ்ட் கிளர்ச்சியைப் பற்றியும் நன்கு அறிந்து கொள்ள விரும்புவோர் 'இரத்தச்சுவடு' என்னும் நூலை வாங்கிப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

இவ்விதமாக தன் தாய் நாட்டிற்கும், திராவிட மக்களுக்கும் அரும்பணியாற்றிய கலைஞர் கருணாநிதி நோய்வாய்பட்டார் இரவென்றும் பகலென்றும் பாராது காடென்றும் மலையென்றும் நினைக்காது, நாள் ஒன்றுக்குப் பல கூட்டங்களில் பேசிப் பேசித் தன் உடம்பை கெடுத்துக் கொண்டார். அவருடைய உடம்பில் இருந்து 30 அவுன்ஸ் சீழ் எடுக்கும் அளவுக்கு மோசமாகி விட்டது. அண்ணா முதல் அனைவரும் அவருடைய உடல் நிலையை கண்டு வருந்தினர். மேலும் கருணாநிதி அவர்களை யாரும் கூட்டங்களுக்கு அழைக்கக் கூடாது என்றும் அறிக்கை விட்டார். கருணாநிதியை மிகவும் ஜாக்கிரதையாக உடம்பைக் காத்துக் கொள்ளும்படியும், பூரண குணம் பெறும் வரையில் ஓய்வு கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கடிந்து கொண்டார்.

நல்ல வேளையாக நோய் நீங்கியது திராவிடம் கருணாநிதியை மீண்டும் பெற்று மகிழ்ந்தது.

சென்னை தியாகராயர் கல்லூரிக்காக கருணாநிதி அவர்கள் பரப்பிரம்மம் என்ற நாடகம் நடித்து உதவி இருக்கிறார். குன்றத்தூர் வழக்கு நிதிக்கும் நாடகம் நடித்து உதவியுள்ளார். மஜீத் குடும்பத்தினருக்கு நிதி யளிக்க நெல்லிக்குப்பத்தில் நாடகம் நடத்தியிருக்கிறார். **T. N.** இராமன் அவர்கள் குடும்ப நிதிக்காகவும் நாடகம் நடத்தி உதவியிருக்கிறார்.

அஞ்சா நெஞ்சன் அழகிரியின் நினைவு மாளிகைக்கு பெரும் பங்கு ஏற்று அதனைச் சிறப்புற நடத்தி யிருக்கிறார்.

இன்னும் இதைப்போல் பலப்பல தொண்டுகளைச் செய்திருக்கின்றார். அவ்வளவும் விடாமல் சொல்ல வேண்டுமானால் ஏடு இடங் கொள்ளாது.

மொத்தத்தில் கருணாநிதியை ஒரு பார்வைப் பார்த்து விடுவோம்.

கருணாநிதி ஒரு இல்லறத்தார். தாயின் தந்தையின் அன்பால் வளர்ந்தவர் அவருக்கு பெரியநாயகி—சண்முக சுந்தரம் என்னும் இரு சகோதரிகள் உண்டு முதல் மனைவியார் பெயர் பத்மாவதி அம்மையார்; இரண்டாம் மனைவியார் பெயர் தயாளு அம்மையார். முதல் மனைவி யார் பெற்ற பிள்ளையின் பெயர் முத்துவேலு இரண்டாம் மனையார் பெற்ற குழந்தைகளின் பெயர் 'அழகிரி' 'ஸ்டாலின்' முதலியவர்கள்.

இத்துடன் கருணாநிதியின் அக வாழ்க்கை முடிந்து விடுகிறது. ஆனால் அவருடைய புற வாழ்க்கை ஆகாயத்தை போல விரிந்து செல்வதாகும்.

கருணாநிதி சாதாரண மனிதர்தான், இருந்தாலும் அவர் சாதித்துள்ள விஷயங்கள் மிகப் பெரியவை! அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாவட்ட மாநாட்டில் கருணாநிதியை புகழ்ந்த அந்தப் புகழுரைகள் இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. அத்தகைய கருணாநிதி! திராவிடவீரர் இன்று திராவிடத்தில் தான் இருக்கிறார். ஆனால், நம்மிடையேயில்லை சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார். கருணாநிதி ஏன் தள்ளப்பட்டார்?

வடநாட்டு வணிக வேந்தன் டால்மியா. அவன் தமிழ் நாட்டின் ஒரு ரயில்வே நிலையத்திற்கும் அதனைச் சார்ந்திருக்கும் பகுதிக்கும் அவன் பெயரால் 'டால்மியா புரம்' என்று அழைக்கப்பட்டு வருகிறது. ஏழைகளின் இரத்தத்தை சிமெண்டாக உருக்கி விற்றுப் பணம் சேர்க்கிறான் டால்மியா? அவன் பெயரால் தமிழ் நாட்டில் ஓர் இடமா? அதுவும் கன்னித் தமிழ் பெயரான 'கல்லக்குடி'யை அழித்து விட்டு என்ற கேள்வி எழுந்தது திராவிடத்தில். அந்த பெயரை மாற்றி பழைய படியே கல்லக்குடியாக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரை எல்லா முறைகளையும் கையாண்டு கேட்டு விட்டது தி. மு. கழகம் திராவிட மக்கள் சார்பில். அசைந்து கொடுக்கவில்லை அரசாங்கம் ஆகவே அறப் போர் துவங்கியது. அந்த அறப் போருக்கு அறிஞர் அண்ணா அவர்கள் கலைஞர் கருணாநிதியை முதல் தளபதியாக நியமித்தார். 1953 ஜுலை 15-ம் நாள் அறப் போர். அதற்கு முன் அண்ணாவின் கட்டளையை ஏற்றுக் கொண்டு திருச்சி மாவட்டம் முழுவதும் புயலாகச் சுற்றி அறப் போராட்டத்தின் அவசியங்களை எடுத்து

விளக்கினர். ஜூலை 15-ம் நாள் அவரே அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி சென்றார். டால் மியாபுரம் என்னும் பெயர் பலகையின் மீது அழகு தமிழில் கல்லக்குடி என்னும் பெயரை ஒட்டினர்.

ஆனல் சென்றவர் வரவில்லை. சென்றார் சிறைக்கு அதுவும் கடுங்காவல் தண்டனை. ஒருநாள் ஒருமாதம் அல்ல ஆறு பெரிய மாதங்கள் 180 நாட்கள். ஆம்! ஆறு மாதம் கழிந்துதான் நாம் அவரைக் காண முடியும். அவர் சிறை சென்ற முழு விபரங்களும் அறிய வேண்டு வோர் டால்மியாபுரப் போராட்டம், சிறையில் கருணாநிதி என்னும் நூல்களை வாங்கிப் படியுங்கள் அதில் முழு விபரமும் கூறப்பட்டிருக்கிறது.

கருணாநிதி ஒரு பெரிய பட்டதாரியல்ல; ஆனல் அவர் பட்டதாரிகளாலும் புகழப்படும் பெருமை வாய்ந் தவர். அவர் ஆற்றல் மிக்க எழுத்தாளர் மட்டுமல்ல; எழுத்தாளர்களால் போற்றப்படும் ஏற்றம் படைத்தவர். அவர் தன் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டதில்லை. ஆனல் நாடு, மொழி, இனம் இவைகள் முன்னேற்றமடைய பாடுபட்டார். கேடுபல வந்தபோதி லும் தளராமல் தன் கடமையை ஆற்றினர். சாமதானம், ஒற்றுமை, பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லாமை இவைகளையே மக்களுக்குப் போதித்தார். ஆனல் நாட் டிற்கு கேடுவிளைவித்த கொடுஞ் சக்திகளைக் களைந்தெரிய அறப்போராட்டத்தில் வேகமாக ஈடுபட்டார். இளைஞர் களைக் கெடுத்துவிடுகின்றான் என்று குற்றம் சாட்டினர் ஆனல் அவர் இளைஞர்களின் இதய நாதனக அன்றும் இன்றும் விளங்குகின்றார்.

அவர் பேச்சின் மூலம் மட்டுமல்ல? எழுத்தின் மூலம் செய்திருக்கும் பணியும் மகத்தானது; அவர் எழுதிய நூல்கள் எண்ணற்றன. அவற்றுள் சிலவற்றைக் காணுங்கள். தூக்குமேடை, நச்சுக்கோப்பை, வாழமுடியாதவர்கள், பலிபீடம் நோக்கி, அறப்போர், கயிற்றில் தூங்கிய கணபதி, கிழவனின் கனவு, சங்கிலிச்சாமி, பிள்ளையோ பிள்ளை, பெரிய இடத்துப் பெண், ஒரே முத்தம், கோவையில் கருணாநிதி, இன முழக்கம், தப்பி விட்டார்கள், களத்தில் கருணாநிதி, பெருமூச்சு, சுழல் விளக்கு, சிந்தனையாழி, இரத்தச் சுவடு, புராணப் போதை, கொலைக்களம், உணர்ச்சிமாலை, பரப்பிரம்பம், நாடும் நாடகமும், பூந்தோட்டம், இதய பேரிகை, இன்னும் பல. *

கருணாநிதி வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல, திரைக் கதை வசனம் எழுதுவதில் இணையற்றவர். ஆம்! அறிஞர் அண்ணாதுரைக்கு அடுத்தவர் கருணாநிதியே என்று திராவிடம் முடிவு கட்டி அவர் எழுதிய திரைக்கதைகளை கைத்தட்டலுடன் வரவேற்று பார்த்து பாராட்டுகிறது. என்றால் அவருடைய திரை அனுபவத்தை எழுதிக் காட்டவா வேண்டும். அவர் எழுதிய திரைக் கதை வசனங்கள்:

இராஜகுமாரி, மருத நாட்டு இளவரசி, மந்திரி குமாரி, மணமகள், தேவகி, பராசக்தி, பணம், நாம், திரும்பிப்பார், இவைகள். இன்னும் பல படங்களில் எழுத இருக்கிறார் அதில் 'மனோகரா'வும் ஒன்று.

* இந்த புத்தகங்கள் கலைமன்றம் 122, வரதா முத்தியப்பன் தெரு சென்னை—1 என்ற விலாசத்தில் கிடைக்கும்.

இத்தகைய எழுத்து வேந்தர், சொல்லின் செல்வர், ஓயாத உழைப்பாளி, நாட்டுக்கு நல்லது செய்யும் நல்லவர், தீமையை அழித்து ஒழிக்கும் அழிவுக்காரர். இச்சகம் பேசி யாருடைய மெச்சுதலையும் எதிர்பார்க்காதவர், திராவிட இனத்திற்கு விடுதலை வாங்கித்தர முயன்ற முன்னணி வீரர். பழைய—மூடப் பழக்க வழக்கங்களை முறியடித்து புதிய ஒரு உலகத்தை உண்டாக்கி அதிலே புதிய ஒரு சமுதாயத்தை தோற்றுவிக்க முயன்றார்.

இத்தகைய பெருமை வாய்ந்தவர் தான் இன்று சிறைக்குள்ளே தள்ளப்பட்டிருக்கிறார். ஆம்! மிக விரைவில் அவர் வெளிவருவார். வந்து திராவிட நாட்டை மீட்டு திராவிடருக்கே ஆக்கும் பணியில் ஈடுபடுவார். அதிலே வெற்றிகாண்பார். என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு!

திராவிடத்தின் புகழ்வானிலே தன் முழு ஒளியுடன் பவனி வரும் கருணாநிதி என்னும் முழுமதியை சிறைச்சாலை என்னும் மேகம் மறைத்திருக்கிறது. மிக விரைவில் புயல் காற்று வீசும், மேகம் கலையும் முழுமதி தோன்றும்.

ஆம்! தோழர்களே கருணாநிதி அவர்கள் சிறை தண்டனையை முடித்துக் கொண்டு சிரித்த முகத்துடன் வெளியே வரப் போகிறார் நாம் அனைவரும் அவரை மரியாதையுடன் வரவேற்கக் காத்துக் கொண்டிருப்போமாக!

மாவீரர் கருணாநிதியின் பேருரையைக் கேட்க நமது செவிகள் துடிக்கின்றன. என்ன செய்வது சீக்கிரம் திரும்பி வந்து விடுவார் அதுவரையில் காத்திருப்போமாக!

அவருடைய அழகிய உருவத்தைக் காண நமது கண்கள் ஆசைக் கொள்ளத்தான் செய்கிறன என்ன செய்வது? சீக்கிரம் திரும்பி வந்துவிடுவார் அதுவரையில் காத்திருப்போமாக!

அடுக்குச் சொல்லும், அழகு நடையும் அமைந்த சொற்போர் வீரர்—கல்லக்குடி அறப்போராட்டத் தளபதி — அண்ணாவின் அருமைத் தம்பி — மிக விரைவில் திரும்பி வந்திடுவார். அது வரையில் காத்திருப்போமாக!

நமது கடமையை கவனத்தோடு, பொறுப்புணர்ந்து புல்லர்களும் நமது பணியினைக் கண்டு திருந்துமளவுக்கு கண்ணியத்தோடு பணியாற்றுவோமாக!

இவ்விதம் நாம் செய்வதன் மூலம், நமது நாட்டிற்கு நல்லது செய்தவர்களாவதுடன் இன்று சிறைக்குள்ளே வாடும் நம் அருமைத் தோழர் கருணாநிதி அவர்கள் உள்ளத்தை மகிழ்வித்தவர்களாகிறோம்.

கருணாநிதி அவர்கள் வெளியிலே வரும்போது நாம் அவருக்குச் சூட்ட நினைக்கும் மலர் மாலையைவிட, நமது கடமையை நல்ல முறையில் செய்து கழகக் கொள்கையைக் காப்பாற்றினோம் என்ற செய்திதான் மிகவும் மகிழ்ச்சி அளிக்கும். ஆகவே அருமைத்

தோழர்களே! நமது கடமையை செய்வோமாக! தளர்ச்சி அயர்வு நேரிடும்போது கடமை வீரர் கருணாநிதி அவர்களை நினைப்போமாக!

இவ்விதம் பணியாற்றிக் கொண்டே இருப்போம் ஒவ்வொரு நாளாகக் கழியும் கருணாநிதி விடுதலை அடையும் நல்லநாள் வரும், மிக விரைவில் வரும் அந்த நாளை எதிர்பார்த்த வண்ணம் காத்திருப்போமாக!

வாழ்க கடமை வீரர் கருணாநிதி !

வளர்க அவர் தொண்டு ! !

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

மக்கள் விரும்பும் ஓரே ஓர் குடும்பப் பத்திரிகை !

'கலைமன்றம்'

திராவிடர் முற்போக்கு வார இதழ்

ஆசிரியர் : பால்வண்ணன்

விலை அணா இரண்டு — எங்கும் கிடைக்கும்.

•

எல்லோரும் சந்தாதாரராகுங்கள் !

ஏஜெண்ட் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை !

•

கலைமன்றம்

P. B. No. 275 — சென்னை—1.